இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 2586/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 15790/2019-லிருந்து எழுகிறது)

பத்திர பதிவுத்துறை தலைவர்,
தமிழ்நாடு மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

கே. பாஸ்கரன் ... எதிர்மேல்முறையீட்டாளர்

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 2587/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 2609/2019-லிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 2588/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 17103/2019-லிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 2589-2592/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 6011-6014/2019-லிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 2593-2597/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 31633-31637/2018-லிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 2598/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 31632/2018-லிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 2599/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 15616/2019-லிருந்து எழுகிறது)

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 2600/2020

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 7722/2020-லிருந்து எழுகிறது)

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) வழக்கு குறிப்பேட்டு எண் 45876/2018-லிருந்து எழுகிறது)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1899 (சுருக்கமாக 'சட்டம்' என அழைக்கப்படும்) மற்றும் தமிழ்நாடு முத்திரைச் சட்டம், 1968 (ஆவணக்குறைவு மதிப்பீட்டை தடைசெய்யும்) விதிகள் ஆகியவற்றின் பொருள்விளக்கத்தை தழுவியே பொதுவான வினாவை இந்த எட்டு மேல்முறையீடுகளும் எழுப்புகின்றன. மேற்சொன்ன பிரிவு 47(அ)[1]-இன் நிலைப்பாடு யாதெனில்:-

> **"பிரிவு 47(அ) குறைத்து மதிப்பிடல் உரிமை மாற்று பத்திரங்கள் முதலியவை எவ்வாறு கையாளப்படவேண்டும்.-**
>
> (1) 1908-ஆம் ஆண்டைய இந்திய பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் XVI/1908)-இன் கீழ் நியமிக்கப்பட்ட பதிவு அலுவலர் (பரஸ்பர உரிமை மாற்றம், கொடை, பெயரிரவல் (பினாமி) உரிமை விடுதலை அல்லது தீர்வு) போன்ற ஏதேனும்

---

1. தமிழ்நாடு சட்டம் (24/1967) மூலம் சேர்க்கப்பட்டதுபோன்று, பின்னர், தமிழ்நாடு சட்டம் (1/2000) மூலம் சட்டப்பிரிவு 47(அ)-இன் உட்பிரிவுகள் 4 மற்றும் 5-க்கு பதிலாக உட்பிரிவுகள் 4 முதல் 10 வரை சேர்க்கப்பட்டன.

உரிமை மாற்ற ஆவணத்தைப் பதிகையில் சொத்தின் சந்தை மதிப்பானது ஆவணத்தில் உண்மையாகக் குறிப்பிடப்படவில்லையெனில், நம்ப காரணம் இருக்குமெனில், அவர், அத்தகைய ஆவணத்தைப் பதிந்த பின்னர் அத்தகைய சொத்தின் சந்தை மதிப்பையும் மற்றும் செலுத்தத்தக்க முறையான கட்டணத்தையும் தீர்மானிப்பதற்காக, அதனை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பவேண்டும்.

(2) மாவட்ட ஆட்சியர், உட்பிரிவு 1-இன் கீழ் பரிந்துரையைப் பெற்று, தரப்பினர்களுக்கு, விசாரிக்கப்படுவதற்கான வாய்ப்பளித்தபின்னர் இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளில் பரிந்துரைக்கப்பட்டவாறு விசாரித்தபின்னர், உரிமை மாற்று பத்திரம், பரிமாற்றம், கொடை, பெயரிரவல் விடுதலை அல்லது தீர்வு விடுப்பு ஆகியவற்றின் முதற்பொருளான சொத்தின் சந்தை மதிப்பையும் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட வரித் தொகையையும் தீர்மானிக்கின்றார். கட்டணத் தொகையில் வேறுபாடு ஏதுமிருப்பின் அதனைச் செலுத்தும் பொறுப்புடைய நபரால் அவ்வேறுபாட்டுத் தொகையானது செலுத்தப்படவேண்டும்.

(3) மாவட்ட ஆட்சியர், தாமாகவோ அல்லது வேறுவகையிலோ பரஸ்பர உரிமை மாற்றம், கொடை, பெயரிரவல் உரிமை விடுதலை அல்லது தீர்வு போன்ற ஏதேனும் உரிமை

மாற்று ஆவணத்தின் முதற்பொருளான சொத்தின் உண்மையான சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்கக் கட்டணம் குறித்து திருப்தியுறும் நோக்கில், ஏற்கெனவே துணைப்பிரிவு *(1)*-இன் கீழ் பரிந்துரைக்கப்படாத பரஸ்பர உரிமை மாற்றம், கொடை, பெயரிரவல் உரிமை விடுதலை அல்லது தீர்வு போன்ற யாதொரு ஆவணப்பதிவின் *5* ஆண்டுகளுக்குள்ளாக அவ்வாவணத்தைக்கோரி ஆய்வு செய்யலாம்; ஆய்வுக்குப் பின்னர் சொத்தின் சந்தை மதிப்பானது ஆவணத்தில் உண்மையாகக் குறிப்பிடவில்லையென அவர் நம்ப காரணமாக இருக்குமெனில், அவர், மேற்கூறப்பட்டவாறு துணைப்பிரிவு *(2)*-இல் வகைசெய்யப்பட்டுள்ள நடைமுறைகளுக்கிணங்க, அத்தகைய சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் கட்டணம் ஆகியவற்றைத் தீர்மானிக்கலாம். கட்டணத் தொகையில் வேறுபாடு ஏதுமிருப்பின் அதனைச் செலுத்தும் பொறுப்புடைய நபரால் அவ்வேறுபாட்டுத் தொகையானது செலுத்தப்படவேண்டும்.

குறிப்பு, இந்திய முத்திரைச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம்) *1967*, நடைமுறைக்கு வரும் முன்னர் பதியப்பட்ட எந்தவொரு ஆவணத்திற்கும் இத்துணைப்பிரிவு பொருந்தாது.

(4) துணைப்பிரிவு *(2)* அல்லது துணைப்பிரிவு *(3)*-இன் கீழ் கட்டணத்தொகையின் வேறுபாட்டைச் செலுத்த, பொறுப்புடைய ஒவ்வொரு நபரும், அத்தகைய கட்டணத்தை பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள்ளாக செலுத்தத்தக்கவராவார். அத்தகைய தொகையை செலுத்தத் தவறுகையில், செலுத்தத் தவறிய நாளன்று நிலுவைக் கட்டணத் தொகையானது, அத்தகைய ஆவணச் சொத்தின் மீதான கட்டணமாகும். அத்தொகையானது, செலுத்தப்பட பரிந்துரைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் செலுத்தப்படாதுள்ள எத்தொகைக்கும், அக்கட்டணத்தைச் செலுத்த பொறுப்புடைய நபர், நிலுவைத் தொகைக்கும் கூடுதலாக, நிலுவைக்காலம் முழுவதற்கும், மாதந்தோறும் *1%* வட்டி செலுத்தவேண்டும்.

... ...

(5) துணைப்பிரிவு *(2)* அல்லது துணைப்பிரிவு *(3)*-இன் கீழான மாவட்ட ஆட்சியரின் உத்தரவினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் இதன் சார்பில் பரிந்துரைக்கப்படும் அதிகாரியிடம் மேல்முறையிடலாம். அத்தகைய முறையீடுகள் அனைத்தும் இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்படும் காலத்திற்குள்ளாக, தாக்கல்

செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் முடிக்கப்படவேண்டும்.

... ...

(6) வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியானவர் துணைப்பிரிவு *(2)* அல்லது துணைப்பிரிவு *(3)*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை, தாமாகவே அழைத்து விசாரிக்கலாம், அத்தகைய உத்தரவானது வருவாய்க்கு குந்தகமெனில் அவர் விசாரணையை மேற்கொள்ளலாம் அல்லது விசாரிக்கப்பட உத்தரவிடலாம் மற்றும் இச்சட்ட விதிகளுக்குட்பட்டு, அத்தகைய உத்தரவை எதிர்மறையாக்கவும், மாற்றியமைக்கவும் மற்றும் நீக்கறவுசெய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் மற்றும் அவர் உகந்ததெனக் கருதும் உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

(7) துணைப்பிரிவு *(2)* அல்லது துணைப்பிரிவு *(3)*-இன் கீழான உத்தரவிற்கெதிரான மேல்முறையீட்டு காலம் முடிந்திருக்கவில்லையெனில்; அல்லது

(அ) அத்தகைய உத்தரவைப் பிறப்பித்தது முதல் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக காலம் கடந்துவிட்டதெனில்; அல்லது

(ஆ) வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியானவர், அத்தகைய உத்தரவிற்கெதிராக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது.

(8) ஒரு நபர் விசாரிக்கப்படும் வாய்ப்பை பெற்றிருந்தாலன்றி, அந்நபரைப் பாதிக்கும் எதிர்மறையான உத்தரவேதும் துணைப்பிரிவு (6)-இன் கீழ் பிறப்பிக்கப்படக்கூடாது.

(9) துணைப்பிரிவு (7), சட்டக்கூறு (ஆ)-இல் குறிப்பிடப்படும் காலத்தைக் கணக்கிடுவதில், வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி முன்பான வழக்கானது நீதிமன்றத்தின் உத்தரவினால் நிறுத்தப்பட்டிருந்த (தடை செய்யப்பட்டிருந்த) காலமானது விலக்கப்படவேண்டும்.

(10) துணைப்பிரிவு (5)-இல் பரிந்துரைக்கப்பட்ட வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியின் துணைப்பிரிவு (6)-இன் கீழான உத்தரவினால் பாதிப்படைந்த எந்தவொரு நபரும், இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட விதிகளினால் பரிந்துரைக்கப்படும் காலத்திற்குள்ளாக மற்றும் முறையில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையிடலாம்.

விளக்கம்.- இச்சட்ட நோக்கிற்காக, யாதொரு சொத்தின் சந்தை மதிப்பானது, பரஸ்பர பரிவர்த்தனை, கொடை, பெயரிரவல் உரிமை விடுதலை, தீர்வு விடுதலை போன்றவற்றின் உரிமை மாற்று ஆவணமானது நிறைவேற்றப்படும் நாளன்று அச்சொத்தானது

வெளிசந்தையில் விற்கப்படுமெனில், கட்டுப்பாட்டாளர் அல்லது வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி அல்லது உயர் நீதிமன்றத்தின் கருத்தில் எத்தொகையைக் கொண்டுவந்திருக்குமோ அல்லது கொண்டுவருமோ அதுவே சொத்தின் சந்தை விலையாக மதிப்பிடப்படவேண்டும்."

3. சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 15790/2019-இன் மூலம் எழும் இம்மேல்முறையீடானது, மேற்படி மேல்முறையீடு தொடர்பான முதன்மையான வழக்காகவும் மற்றும் பொருண்மைகளாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை வசதிக்காக விரித்துரைக்கப்படுகின்றன. பிற மேல்முறையீடுகளில் சம்பந்தப்பட்ட பொருண்மைகள், வழக்கு எண்கள், உத்தரவு தேதிகள் மற்றும் சொத்தின் விவரங்கள் போன்றவை தவிர பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாகும்.

4. சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 15790/2019-லிருந்து எழுந்த மேல்முறையீடானது, உ.ப.மே. எண் 2666/2012-இல் உயர் நீதிமன்றத்தினால்[2] வழங்கப்பட்ட 2.2.2018-ஆம் தேதியிடப்பட்ட இறுதித் தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுவதாகும்.

அ. எதிர்மேல்முறையீட்டாளர், ஈரோடு மாவட்டம், திருப்பூர் தாலுக்கா, சித்தாராவுத்தன்பாளையம் கிராமத்தில் சர்வே எண் 372/2(அ)-இல் இரண்டு சொத்துகளை வாங்கினார்; அவை (i) 46216 சதுர அடியானது 21.2.2000-ஆம் தேதியிடப்பட்ட 1-ஆம் புத்தகத்தில் பதியப்பட்ட ஆவண எண் 2647/2000 கொண்ட கிரைய ஆவணத்தின் மூலம்

---

2. மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

ரூ.4,78,000/- தொகைக்கு வாங்கப்பட்டது மற்றும் (ii) 47960 சதுர அடியானது 18.2.2000-ஆம் தேதியிடப்பட்ட 1-ஆம் புத்தகத்தில் பதியப்பட்ட ஆவண எண் 2648/2000 கொண்ட கிரைய ஆவணத்தின் மூலம் ரூ.4,96,000/- தொகைக்கு (அதாவது 1 சதுர அடி ரூ.10.34) வாங்கப்பட்டது.

ஆ. மேற்படி கிரைய ஆவணங்களின் வழிகாட்டு மதிப்பானது சதுர அடிக்கு ரூ.58.30/-க்கும் குறைவானதால், இங்குள்ள 5-ஆம் மேல்முறையீட்டாளரான தாராபுரம், சார்-பதிவாளர், இங்குள்ள 2-ஆம் மேல்முறையீட்டாளரான கோயமுத்தூர் தனி துணை ஆட்சியருக்கு (முத்திரை) சட்டப்பிரிவு 47(அ)-இன் கீழ் அனுப்பிவைத்தார்.

இ. ஏன் பற்றாக்குறை முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூ.2,66,088/- மற்றும் ரூ.2,76,132/- ஆகியவை வசூலிக்கப்படக் கூடாதென விளக்கங்கோரி 2-ஆம் மேல்முறையீட்டாளர், 13.9.2000-ஆம் தேதியிடப்பட்ட மு.பா. (எஸ்.ஆர்.) எண் 3667/2000 வழக்கு குறிப்பேடு மற்றும் மு.பா. (எஸ்.ஆர்.) எண் 3668/2000 வழக்கு குறிப்பேடு படிவ எண் 1-யிலான அறிவிப்புகளை எதிர்மேல்முறையீட்டாளருக்கு அனுப்பினார். அதன்பின்னர், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர், 4.2.2003 அன்று படிவம்-II-யிலான அறிவிப்புகளை எதிர்மேல்முறையீட்டாளருக்கு அனுப்பினார்; அதன்மூலம் சொத்தின் தற்காலிக மதிப்பானது, வினாவிற்கிடமான கிரைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட சொத்தின் ஒரு சதுரடியின் மதிப்பு ரூ.10.34/-க்கு எதிராக சதுரடி மதிப்பு ரூ.58.30/- என நிர்ணயிக்கப்பட்டது.

ஈ. 2-ஆம் மேல்முறையீட்டாளர், 30.4.2003 அன்று மு.பா. (எஸ்.ஆர்.) எண்கள் 3667 மற்றும் 3668/2000 வழக்கு குறிப்பேடு ஆகியவற்றில் இறுதி ஆணைகளைப் பிறப்பித்தார். மு.பா. (எஸ்.ஆர்.) எண் 3667/2000 வழக்கு குறிப்பேட்டில் இவ்வாறாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது:-

"படிவம் I-யிலான அறிவிப்பு தொடர்பாக, பதிவுக்குரியவரிடமிருந்து எந்தவித முறையீடும் பெறப்படவில்லை மற்றும் பல நினைவூட்டல்கள் விடுத்தும் அவர் விசாரணைக்கு வரவில்லை மற்றும் அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் ஆட்சேபணை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே, படிவம்-II-யிலான தற்காலிக உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. கிரையம் பெற்றவரிடமிருந்து ஆட்சேபணை ஏதும் பெறப்படவுமில்லை, அவர் விசாரணைக்கு முன்னிலையாகவுமில்லை. ஆவண மதிப்பு தொடர்பாக பதிவுக்குரியவருக்கு ஆட்சேபணை ஏதுமில்லையென புரிந்துகொள்ளப்படுகிறது. பார்வை 3-இல் குறிப்பிடப்பட்ட படிவம்-II-இல் குறிப்பிடப்பட்டவாறு தற்காலிகமாக தீர்மானிக்கப்பட்ட மதிப்பை உறுதிசெய்து உத்தரவிடப்படுகிறது.

முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின்படி ஆவணத்தின் மூலம் வாங்கப்பட்ட சொத்தின் வெளிச்சந்தை

மதிப்பானது ரூ.26,95,400/- என இறுதியாகத் தீர்மானிக்கப் படுகிறதென இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி முத்திரைக் கட்டண மதிப்பு தொடர்பாக, ஏற்கெனவே செலுத்தப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூ.57,360/- நீங்கலாக ரூ.3,23,448/-ஐ விதிக்கத்தக்கதாகும். செலுத்தப்படவேண்டிய பற்றாக்குறை முத்திரைக் கட்டணமானது ரூ.2,66,088/- ஆகும். (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்).

பதிபவர் இவ்வுத்தரவு தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள்ளாக பற்றாக்குறை முத்திரைக் கட்டணம் ரூ.2,66,088/-ஐ பாரத ஸ்டேட் வங்கியிலோ அல்லது துணை கருவூலத்திலோ, 0030 முத்திரைப் பதிவு 030ஜி, பற்றாக்குறை முத்திரைக் கட்டணம் எபிஎஎ0202 என்ற கணக்கில் செலுத்தி, அதன் அசல் படிவமானது இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்."

மு.பா. (எஸ்.ஆர்.) எண் 3668/2000 வழக்கு குறிப்பேட்டில் சந்தை மதிப்பானது ரூ.27,97,100/- என மதிப்பிடப்பட்டு மற்றும் அதனை ஒத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

உ. எதிர்மேல்முறையீட்டாளர், சட்டப்பூர்வ மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார், அது, 1-ஆம் மேல்முறையீட்டாளரான பதிவுத்துறை தலைவரால் 5.8.2005-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் நிராகரிக்கப்பட்டது. மேல்முறையீட்டு நிலையில், ஈரோடு, மாவட்ட

பதிவாளரிடமிருந்து ஓர் அறிக்கை கோரப்பட்டது. அது 5.8.2005-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவில் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டது:-

"... இம்மேல்முறையீடானது அனுமதிக்கப்பட்டு, ஆவணச் சொத்து வளாகத்தை ஆய்வு செய்யவும் மற்றும் விசாரணையின்படி ஆவணச் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பின் நிர்ணயத்திற்காகப் பரிந்துரைக்கவும், கோவை துணைப் பதிவுத்துறை தலைவர் நியமிக்கப்பட்டார். மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து (முத்திரைகள்) அசல் கோப்புங்கூட கோரப்பட்டது. முத்திரைகளுக்கான மாவட்ட வருவாய் அலுவலரின் அசல் கோப்புகளைப் படித்ததில், மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு முன்னிலையாகாததையடுத்து, ஆட்சேபணை இல்லை எனக் கருதி, வழிக்காட்டு மதிப்பானது உறுதிசெய்யப்பட்டது.

கோவை, துணைப் பதிவு தலைவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்ட ஈரோடு மாவட்ட பதிவாளரின் அறிக்கையில், பதிவு நாளான 21.2.2002 அன்று கிராமத்திலிருந்த சொத்துகளின் சர்வே நிலத்தில் கள ஆய்வு செய்கையில், அச்சொத்துகள் உள்ளாட்சியில் சேர்க்கப்படவில்லையென்றும், 1.4.2003 அன்றுதான் உள்ளாட்சியில் சேர்க்கப்பட்டதென்றும், ஆவணச் சொத்துகள் உள்ளாட்சியில் சேர்க்கப்பட்டதையடுத்து, தற்பொழுதைய மதிப்பானது 1 சதுரடிக்கு ரூ.200/-ஆக

நிர்ணயிக்கப்படுகிறதென்றும், பதிவு நாளன்று அதன் மதிப்பு 1 சதுரடிக்கு ரூ.58.30/- என நிர்ணயிப்பது பொருத்தமானதென்றும் அவர் பரிந்துரைத்துள்ளார்."

ஊ. எதிர்மேல்முறையீட்டாளர், பாதிப்படைந்து, 5.8.2005-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் உ.ப.மே. எண் 2666/2012-ஐ தாக்கல் செய்தார்; அது, உயர் நீதிமன்றத்தினால் 2.2.2018-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் அனுமதிக்கப்பட்டது. "1-ஆம் மேல்முறையீட்டாளர் தன்னுடைய கடமையை துணைப் பதிவுத்துறைத் தலைவரிடம் ஒப்படைத்திருந்தார், அது, *எஸ். சாந்தி -எதிர்- வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி* (உ.ப.மே. எண் 2820/2012) என்ற வழக்கில் 5.6.2015 அன்று உயர் நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டதற்கு எதிரானதாகும்" என உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது. விதி 6-ஆனது பின்பற்றப்படவில்லை என்றுங்கூட கருத்து தெரிவிக்கப்பட்டது. உயர் நீதிமன்றமானது இவ்வாறாக முடிவு செய்தது:-

"8. எனவே, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பிறருக்கு அளிக்க அதிகாரமுடையவரல்ல. அதுபோன்று, சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயிக்கையில், விதிகளின் விதி 6-இன் கீழ் வகுக்கப்பட்ட நடைமுறையானது, அதிகாரிகளால் பின்பற்றப்படவில்லை. அப்படியிருக்க, விதி 6 மற்றும் 11(அ) ஆகியவற்றின் வழுவலின் அடிப்படையில் ஒட்டுமொத்த நடைமுறைகளும் பாதிப்படைகின்றன.

அதற்கிணங்க, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவானது சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல. எனவே அது, நீக்கறவு செய்யப்படுகிறது. அதிகாரிகள், மேல்முறையீட்டாளருக்கு ஆவணத்தை விடுவிக்குமாறு பணிக்கப்படுகின்றனர்."

எனினும், அது, விதி 6-ஆல் வகுக்கப்பட்ட நடைமுறையானது எவ்வாறு பின்பற்றப்பட்டது என்பது கூறப்படவில்லை.

எ. சார்ந்து நிற்கப்பட்ட *(மேற்படி) எஸ். சாந்தி* வழக்கின் தீர்ப்புரையானது கீழ்க்காணுமாறு கருத்து தெரிவித்திருந்தது:-

"17. சட்டத்தின் கீழ் சில கடமைகள் அளிக்கப்பட்ட அதிகாரியானவர், சட்டத்தின் கீழ் அத்தகைய அதிகாரத்தை மாற்றியமைத்தலுக்கு விதி எதுவும் செய்யாதநிலையில், அக்கடமைகளைத் தாமாகவே நிறைவேற்றவேண்டியுள்ளது, அவற்றைப் பிறருக்கு அளிக்கமுடியாது. தற்பொழுதைய வழக்கில், விதிகளின் விதி 4(3)(இ) மற்றும் 11(அ) ஆகியவற்றின் கீழ் முறையே 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான மாவட்ட ஆட்சியர் மற்றும் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான பதிவுத்துறை தலைவர் ஆகியோர் சொத்தை ஆய்வு செய்யவேண்டியுள்ளது மற்றும் அத்தகைய அதிகாரத்தை பிறருக்கு அளிக்கச்செய்யும் வழிவகைகள் ஏதும் விதிகளின் கீழே தரப்படவில்லை. எனவே, எதிர்மேல்முறையீட்டாளர்களின் கட்டளையின் கீழ் பிற அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது ஒட்டுமொத்த நடைமுறைகளையும் பாதிக்கிறது.

18. விதிகளின் விதி 7-இன் கீழ் கட்டாயமாக்கப்பட்டபடி படிவம் I-இன் கீழான அறிவிப்புக்கு விடுக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள்ளாக உத்தரவைப் பிறப்பிக்க 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தவறியது ஒட்டுமொத்த நடவடிக்கை-களையும் பாதித்துவிட்டது. படிவம் I-இன் அறிவிப்பானது, 17.5.2005 அன்று விடுக்கப்பட்டது, ஆனால் இறுதி உத்தரவானது 5.12.2006 அன்று அதாவது, 1½ ஆண்டுகளுக்குப் பின்னர் பிறப்பிக்கப்பட்டது. அதாவது 3 மாதங்கள் கழிந்த பின்னர் பிறப்பிக்கப்பட்டது. எனவே ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் பாதிப்படைந்தன.

19. இவ்வெதிர்ப்புக்குள்ளான உத்தரவானது, இச்சட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத மாவட்ட பதிவாளர்/துணை வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையிலேயே முற்றிலும் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆய்வறிக்கைகள், இச்சட்டத்தின் கீழ் அருகதையுடைய அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட முதன்மையான ஆவணங்களல்ல. எனவே 1 மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களின் நடைமுறைகள் பாதிப்படைகிறது."

5. இதுபோன்ற உத்தரவுகள் நீதிமன்றத்தினால் பிற வழக்குகளில் பிறப்பிக்கப்பட்டன. அவ்வுத்தரவுகள் உடனிணைந்த வழக்குகளுடன் தற்பொழுது மேல்முறையீட்டில் உள்ளன. இவ்வழக்குகள் விதிகள் 4 முதல் 7 மற்றும் விதி 11(அ) ஆகியவற்றின் பின்னணியில் எழுவதையடுத்து அவ்விதிகள் கீழே குறிப்பிடப்படுகின்றன:-

"4. **பிரிவு 47(அ)-இன் கீழ் பரிந்துரையைப் பெற்றதன் அடிப்படையிலான நடைமுறை.-** (1) பதிவு அலுவலரிடமிருந்து பிரிவு 47(அ) உட்பிரிவு (1)-இன் கீழ் பரிந்துரையைப் பெற்று மாவட்ட ஆட்சியர் படிவம்-I-யிலான அறிவிப்பை அனுப்பவேண்டும்.

(அ) ஆவணம் எவரால் நிறைவேற்றப்படுகிறதோ அவர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றும்,

(ஆ) யாருக்கு ஆதரவாக ஆவணம் நிறைவேற்றப்பட்டுள்ளதோ, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிந்துரை பெற்றதைத் தெரிவித்து, சொத்தின் உண்மையான சந்தை மதிப்பு கூறப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதற்கேதுமிருப்பின், அதனை எழுத்து வடிவிலும், தனக்கு ஆதரவாக சான்றுகள் ஏதுமிருப்பின் அவற்றையும் அறிவிப்பு பெற்ற 21 நாட்களுக்குள்ளாக சமர்ப்பிக்கக் கோரவேண்டும்.

(2) மாவட்ட ஆட்சியர் உகந்ததெனக் கருதுவாரெனில், உட்பிரிவு (1)-இன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்ட எவரிடமிருந்தும் வாக்குமூலம் பதியலாம்.

(3) மாவட்ட ஆட்சியர் தன்னுடைய விசாரணை நோக்கிற்காக -

(அ) அரசு அலுவலகம் அல்லது அரசு அலுவலர் அல்லது உள்ளாட்சி அமைப்பிடமிருந்து எந்தவொரு தகவலையும் அல்லது ஆவணத்தையும் கோரலாம்;

(ஆ) அரசாங்கத்தின் ஏதேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விசாரித்து எந்த வாக்குமூலத்தையும் பதியலாம்; மற்றும்

(இ) தொடர்புடைய தரப்பினருக்கு முறையான அறிவிப்பு வழங்கிய பின்னர் சொத்தை ஆய்வு செய்யலாம்.

(4) உட்பிரிவு (1)-இன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்ட நபர்களிடமிருந்து ஏதேனும் முறையீடுகள் பெறப்பட்டிருப்பின், அவற்றை பரிசீலித்த பின்னர் மற்றும் தன்முன்புள்ள ஆவணங்கள் மற்றும் சான்றுகளை ஆய்வுசெய்த பின்னர் மாவட்ட ஆட்சியர், சொத்துகளின் சந்தை மதிப்பையும் மற்றும் செலுத்தத்தக்க தீர்வையினையும் தற்காலிகமாக தீர்மானித்து, எழுத்து வடிவில் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். சொத்தின் தற்காலிக சந்தை மதிப்பானது எதன் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது என்பது உத்தரவில் தெளிவாகத் தெரிவிக்கப்படவேண்டும்.

(5) **சந்தை மதிப்பைத் தீர்மானிப்பதற்கான கோட்பாடுகள்.-** மாவட்ட ஆட்சியர் இயன்றவரையில் தற்காலிக சந்தை மதிப்பைத் தீர்மானிப்பதில், பின்வரும் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும். தற்காலிக சந்தை மதிப்பில்,

(அ) நிலங்கள் பொறுத்தவரையில் -

(i) புன்செய், மானாவாரி, நன்செய் போன்று நிலங்களை வகைப்படுத்துதல்;

(ii) தீர்வு பதிவேடு மற்றும் கணக்குகளில், பல்வேறு தரங்களின் கீழ் வகைப்பாடுகள்;

(iii) ஒவ்வொரு வகைப்பாட்டிற்குமான வருவாய்த் துறையின் விலைமதிப்பு;

(iv) வினாவிற்கிடமான நிலத்தின் மதிப்பில் செல்வாக்கு செலுத்தும் பிற காரணிகள்;

(v) தனிப்பட்ட ஆவணத் தரப்பினர் அல்லது ஏதேனும் நபரால் குறிப்பிடப்படும் சிறப்பு பரிசீலனையைக் கோரும் கருத்துகள் ஏதுமிருப்பின்;

(vi) அருகிலுள்ள நிலங்கள் அல்லது சுற்றுப்புறத்திலுள்ள நிலங்களின் மதிப்பு;

(vii) நிலத்திலிருந்து சராசரி மகசூல், சாலை மற்றும் சந்தைக்கு அருகாமை, கிராமக் குடியிருப்பிலிருந்து தொலைவு நிலப்பரப்பின் மட்டம் போக்குவரத்து வசதிகள், குளம், கிணறுகள் மற்றும் விசைக்குழாய் இணைப்புகள் போன்ற நீர்ப்பாசன வசதிகள்.

(viii) நிலத்தில் விளைவிக்கப்பட்ட பயிரின் தன்மை; மற்றும்

(ix) நிலத்தின் பயன்பாடு, குடியிருப்பு, வணிகம், தொழிற்சாலை அல்லது விவசாய நோக்கங்களுக்கானது, விவசாய நிலமானது குடியிருப்பு

அல்லது வணிகம் அல்லது தொழிற்சாலை நிலமாக மாற்றப்படும் பட்சத்தில் அதன் ஆய்ந்த மதிப்பீடு.

(ஆ) வீட்டுமனைகளைப் பொறுத்தவரையில் -

(i) ஓரிடத்திலுள்ள வீட்டுமனைகளின் பொதுவான மதிப்பு;

(ii) சாலை, இரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து தடத்திற்கு அருகாமை;

(iii) சந்தை, கடைகள் மற்றும் அது போன்றவற்றிற்கு அருகாமை;

(iv) அவ்விடத்திலுள்ள அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற வசதிகள்;

(v) சுற்றுப்புறத்திலுள்ள மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தொழிற்சாலை முன்னேற்றங்கள்;

(vi) தொடர்புடைய உள்ளூர் அதிகாரிகளின் வரி விதிப்பு ஆவணங்களைச் சார்ந்து மனைகளின் நிலவரி மதிப்பீடு;

(vii) மனையின் மதிப்பீட்டில் சிறப்பிடம் பெறும் வேறுபிற காரணிகள்; மற்றும்

(viii) தரப்பினர்களால் முறையிடப்பட்ட தனிப்பட்ட காரணி.

(இ) கட்டிடங்களைப் பொறுத்தவரையில் -

(i) வகை மற்றும் கட்டமைப்பு;

(ii) கட்டப்பட்ட இடம்;

(iii) அடித்தளப்பரப்பு;

(iv) கட்டுமான ஆண்டு;

(v) பயன்படுத்தப்பட்ட பொருட்கள்;

(vi) தேய்மான விகிதம்;

(vii) விகிதங்களின் ஏற்ற இறக்கங்கள்;

(viii) மதிப்பீட்டில் இடம்பெறும் வேறுபிற காரணிகள்;

(ix) தொடர்புடைய உள்ளாட்சித் துறை அதிகாரிகளின் வரி விதிப்பாவணங்களின் அடிப்படையிலான சொத்து வரி;

(x) எந்த நோக்கத்திற்காக கட்டிடமானது பயன்படுத்தப்படுகிறது, அந்த கட்டிடத்திற்கு வாடகைமூலம் வருமானம் வந்தால் ஆண்டொன்றுக்கு எவ்வளவு வாடகை என்பதாகும்; மற்றும்

(xi) தரப்பினர்களால் முறையிடப்பட்ட வழக்கின் ஏதேனும் தனிப்பட்ட காரணி.

(ஈ) நிலங்கள், வீட்டுமனைகள் மற்றும் கட்டிடங்கள் தவிர சொத்துகள் -

(i) சொத்தின் தன்மை மற்றும் நிலை;

(ii) சொத்தானது பயன்படுத்தப்படும் நோக்கம்; மற்றும்

(iii) சொத்தின் மதிப்பீட்டிலுள்ள வேறு பிற சிறப்புக் காரணிகள்.

(6) **தற்காலிக சந்தை மதிப்பீட்டினை முடிவுசெய்த பின்னர் நடைமுறை:.-** மாவட்ட ஆட்சியர், சொத்துகளின் தற்காலிக சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க வரி ஆகியவற்றை தீர்மானிக்கும் தன்னுடைய உத்தரவின் நகலை, வரி செலுத்த கடமையுடைய அனைத்து நபர்களுக்கும், படிவம்-II-யிலான அறிவிப்புடன் அனுப்பி, அத்தகைய சந்தை மதிப்பு தீர்மானத்திற்கு ஆட்சேபணை ஏதுமிருப்பின் அறிவிப்பில் குறிப்பிட்ட காலத்திற்குள் தெரிவிக்குமாறு கோரவேண்டும். மாவட்ட ஆட்சியர், அறிவிப்பில் குறிப்பிட்ட நாளன்றோ அல்லது அவரால் நிர்ணயிக்கப்பட்ட வேறு நாளன்றோ தரப்பினர்களை விசாரிக்கவேண்டும்.

(7) **சந்தை மதிப்பைத் தீர்மானிக்கும் இறுதி உத்தரவு.-** *(1)* மாவட்ட ஆட்சியர், விசாரணையின்பொழுது எழுத்துவடிவில் தரப்பட்ட முறையீடு மற்றும் வலியுறுத்தப்பட்டவை அல்லது தரப்பினர்களிடமிருந்து முறையீடு ஏதுமின்மை அல்லது ஏதேனும் வழக்கில் விசாரணையின்பொழுது அவர்கள் தாமே முன்னிலையாகத் தவறியமை ஆகியவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்புடைய அனைத்து பொருண்மைகளையும் மற்றும் தம்மிடமுள்ள சான்றுகளையும் கவனத்துடன் பரிசீலித்த பின்னர், சொத்துகளின் சந்தை மதிப்பையும் மற்றும்

செலுத்தத்தக்கத் தீர்வையினையும் தீர்மானித்து முதல் அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்முதல் மூன்று மாதங்களுக்குள்ளாக உத்தரவு பிறப்பித்து, அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலை தரப்பினர்களுக்கு அனுப்பி, முத்திரை தீர்வைத் தொகையில் வேறுபாடு ஏதுமிருப்பின் அதனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(2) தொடர்புடைய பதிவு அலுவலருக்கு, அவருடைய ஆவண கோப்பிற்காக உத்தரவின் நகலை அனுப்பவேண்டும்.

(3) மாவட்ட ஆட்சியரால் தீர்மானிக்கப்பட்ட வரித் தொகையின் வேறுபாடானது, பிரிவு *47(அ)*-இன் உட்பிரிவு *(2)* அல்லது உட்பிரிவு *(3)*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவின் தேதியிலிருந்து, இரண்டு மாதங்களுக்குள்ளாக செலுத்தப்படவேண்டும்.

(4) மாவட்ட ஆட்சியர், முத்திரைக் கட்டணம் மற்றும் வட்டி ஆகியவற்றில் வேறுபாடிருப்பின், அவற்றை சட்டப்பிரிவு *47(அ)*-இன் கீழ் வசூலித்த பின்னர், ஆவணத்தில் மேற்குறிப்பிடுவதன் மூலம் படிவம்-III-இல் சான்று வழங்கவேண்டும்.

... ...

11(அ). **மேல்முறையீட்டு அதிகாரியின் முடிவு.-** மேல்முறையீட்டு அதிகாரியானவர், மேல்முறையீட்டைத் தீர்மானிக்கும் நோக்கிற்காக,-

(அ) அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பின் கீழான எந்த அரசு அலுவலகம், அலுவலர் அல்லது அதிகாரியிடமிருந்து எந்தத் தகவலையும், ஆவணத்தையும் கோரலாம்;

(ஆ) அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பின் கீழான அரசு அலுவலர் அல்லது அதிகாரி எவரிடமிருந்தும் அவருடைய கூற்றை ஆய்வுசெய்து பதியலாம்[3]; மற்றும்

(இ) தொடர்புடைய தரப்பினருக்கு முறையான அறிவிப்பு அளித்த பின்னர் சொத்தை பார்வையிடலாம்."

6. அனைத்து மேல்முறையீடுகளிலும், மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்கள் தி/ள். டி. சுந்தர் ராமநாதன், எம்.ஏ. வெங்கட சுப்ரமணியன், கே.வி. மோகன், ராகவ் ஓஙகர், பி.ஜே. ஜார்ஜ் மற்றும் புல்கிட் தாரே ஆகியோர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம். எங்களுடைய பரிசீலனைக்காக கீழ்க்காணும் வினாக்கள் எழுகின்றன:-

---

3. உரை/குறிப்பானது 9.3.2001 அன்று வெளியிடப்பட்ட அரசிதழிற்குட்பட்டதாகும். எனினும், மொழியானது, விதி 4(3)(ஆ)-க்கு ஒத்ததல்ல.

1. கள ஆய்வு நடத்த துணைப் பதிவுத்துறை தலைவரையோ அல்லது பிற அலுவலர்களையோ கோரி, மேல்முறையீட்டு அதிகாரியால் அதாவது தலைமை வருவாய் கட்டுபாட்டு அதிகாரி (பதிவுத்துறை தலைவர்)-ஆல் விடுக்கப்பட்ட பணித்தல்கள், பணி ஒப்படைப்பாகி, அது விதி 11(அ)-ஐ வழுவி, அதன்மூலம் ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் பாதித்ததா?

இவ்வினாவானது, அனைத்து மேல்முறையீடுகளிலும் எழுகிறது.

2. மாவட்ட ஆட்சியர், சொத்துகளின் சந்தை மதிப்பு மற்றும் ஆவணத்தின் மீது செலுத்தப்பட்ட முத்திரைக் கட்டணம் ஆகியவற்றைத் தீர்மானித்து, முதல் அறிவிப்பு நாள் முதல் 3 மாதங்களுக்குள்ளாக உத்தரவைப் பிறப்பிக்க, விதிகளின் விதி 7 பரிந்துரைப்பது அறிவுறுத்தலானதா? அல்லது கண்டிப்பானதா?

இவ்வினாவானது, சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 17103/2019-இன் மூலம் எழும் மேல்முறையீட்டைத் தவிர அனைத்து மேல்முறையீடுகளிலும் எழுகிறது.

3. பதிவு பெறுபவர்களால் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டை முடிவுசெய்கையில், மேல்முறையீட்டு அதிகாரியானவர், சொத்தின் மதிப்பை உயர்த்த, சட்டப்பிரிவு 47(அ)-இன் கீழ் அதிகாரமுடையவரா?

இவ்வினாவானது சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 31633-31637/2018-இன் மூலம் எழும் மேல்முறையீட்டில் மட்டுமே எழுகிறது.

7. இவ்வினாக்களை நாங்கள் விவாதிக்கும் முன்னர், முதலில் விதி 6-ஐ மீறுதல் தொடர்பாக குற்றஞ்சாட்டப்படும் பிரச்சினையானது கையாளப்பட

முயற்சிக்கப்படலாம். மேல்முறையீட்டு மனுவில், முதன்மையான விடயத்தில், பின்வரும் காரணங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன:-

"எல். ஏனெனில், விதிகளின் விதி 6-க்கிணங்க சொத்துகளின் சந்தை மதிப்பைத் தீர்மானித்து, படிவம் II-யிலான தற்காலிக அறிவிப்புகள் 2-ஆம் மனுதாரரால் அனுப்பப்பட்டன என்பதை ஆய்வுசெய்ய மாண்புமிகு உயர் நீதிமன்றம் தவறிவிட்டது. விதி 6-இன் கீழ் வகுக்கப்பட்ட விதியானது முறையாகப் பின்பற்றப்பட்டு, விதி 6-இன் வழுவல் நிகழாதவிடத்து, தற்பொழுதைய வழக்கில் பொருண்மைகளை ஆய்வு செய்யாமல், எதிர்மனுதாரருக்கு ஆதரவாக உத்தரவைப் பிறப்பித்தலில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது.

எம். ஏனெனில், படிவம் I அல்லது படிவம் II-இல் அனுப்பப்பட்ட அறிவிப்புகளுக்கெதிராக எதிர்மனுதாராரிடமிருந்து ஆட்சேபணை ஏதும் பெறப்படாததால், அதற்கிணங்க, 2-ஆம் மனுதாரர் இறுதி உத்தரவைப் பிறப்பிக்க முற்பட்டார் என்பதை ஆய்வுசெய்ய, மாண்புமிகு உயர் நீதிமன்றம் தவறிவிட்டது. இறுதி சந்தை மதிப்பை முடிவு செய்வதற்கான நடைமுறையானது, விதிகளுக்கிணங்க பொருத்தமாகப் பின்பற்றப்பட்டுள்ளது."

அத்தகைய மீறுதல் காரணம் ஏதும் எழுப்பப்பட்டதாக மேல்முறையீட்டு உத்தரவு கூறவில்லை. எனவே நாங்கள், விதி 6-இன் கீழ் பரிந்துரைக்கப்படும் நடைமுறை மீறல் எதையும் காணவில்லை. சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 17103/2019 மற்றும் 31633-31637/2018 ஆகியவற்றின் மூலம் எழும் மேல்முறையீடுகளில் இதுபோன்ற சூழ்நிலைகள் அடைகின்றன.

8. வினா எண் 1 தொடர்பாக, விதி 11(அ)-இன் கீழ் மேல்முறையீட்டு அதிகாரியானவர் எந்தவொரு அலுவலர் அல்லது அதிகாரி எவரிடமிருந்தும், எந்தத் தகவலையும் கோரலாம் மற்றும் சொத்தைப் பார்வையிட்டு அறிக்கை அனுப்புமாறு அரசின் கீழான அலுவலர் அல்லது அதிகாரி அல்லது அரசு அலுவலர் எவரையும் பணிக்கமுடியும். சொத்தை, அத்தகைய ஆய்வு செய்ய வைத்தல் அல்லது சான்றை சேகரித்தல் மற்றும் அறிக்கை கோருதல், தம்முடைய அடிப்படைப் பணியை ஒப்படைத்தலாகாதென மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. ஒவ்வொரு மேல்முறையீட்டிலும், சொத்துகளை நேரடியாக ஆய்வுசெய்தல் என்பது மனித ரீதியில் சாத்தியமல்ல. அதற்குப்பதிலாக, எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டதாவது:-

அ) ஒப்படைக்கப்படக்கூடிய அதிகாரங்கள் குறிப்பாக சட்டப்பிரிவு 76(அ)-இன் கீழ் தரப்படுகின்றன. சட்டப்பிரிவு 47(அ)-இன் கீழான அதிகாரம் அத்தகைய ஒன்றல்ல; மற்றும்

ஆ) பொறுப்பு ஒப்படைக்கும் அதிகாரமானது சட்டத்தின் கீழ் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ அளிக்கப்பட்டாலன்றி, அதிகாரமானது பொறுப்பு ஒப்படைக்கப்படமுடியாது; (இக்கோட்பாட்டிற்கு

ஆதரவாக ***சானி சில்க் மில்ஸ் (பி) லிமிடெட் மற்றும் பலர் -எதிர்- மாநில பணியாளர்கள் காப்பீட்டு நிறுவனம்***[4] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் முடிவானது சார்ந்துநிற்கப்படுகிறது).

9. ***பிரத்யாத் குமார் போஸ் -எதிர்- மாண்புமிகு கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி***[5] என்ற வழக்கில் உயர் நீதிமன்ற பதிவாளருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதியரசர் அந்நீதிமன்றத்தின் ஒரு நீதியரசரை நியமித்தார். அறிக்கையைப் பரிசீலித்து விசாரித்த பின்னர், பதிவாளர், பணியிலிருந்து நீக்கப்பட்டார். தலைமை நீதியரசர், மற்றொரு நீதியரசருக்கு விசாரணை அதிகாரத்தை ஒப்படைத்திருக்கக்கூடாது என்ற வாதத்தைக் கையாளுகையில், இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வானது கோட்பாடுகளைக் கீழ்க்காணுமாறு தெரிவித்தது:-

> "... ... விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொறுப்பான மற்றும் தகுந்த அதிகாரியை நியமிப்பதாலேயே, சட்டப்பூர்வ பணிசார்ந்த அத்தகைய அதிகாரத்தைச் செயல்படுத்துதலை, தன்னுடைய பணிகளை ஒப்படைத்துவிட்டதாகக் கூறப்படமுடியாது என்பது நன்கு அங்கீகரிக்கப்பட்டதாகும். அதுதான் எந்த நிர்வாக அதிகாரத்தையும் செயல்படுத்தும் ஒரு சாதாரண முறையாகும். சட்டம் குறிப்பிட்டு, கூறுவனவற்றைத் தவிர

---

4. (1994) 5 எஸ்.சி.சி. 346
5. (1955) 2 எஸ்.சி.ஆர். 1331

ஒப்படைக்கப்படமுடியாதது யாதெனில்,- அத்தகைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கான அதிகபட்ச கடமையே ஆகும். *கல்வி வாரியம் (போர்டு ஆ.:ப் எஜூகேஷன்) -எதிர்- ரைஸ்*[6] என்ற வழக்கில், அரச நீதிப் பேரவையினால் (உறவுஸ் ஆ.:ப் லார்ட்ஸ்) குறிப்பிடப்பட்டதுபோன்று, இவ்வழக்கில் தொடர்புடையதுபோன்று நிர்வாக விடயத்தை முடிவுசெய்யவேண்டியுள்ள ஒருவர், தான் செயல்பட வேண்டியுள்ள அடிப்படை ஆவணங்களை சாத்தியமான மற்றும் வசதியானவகையில் பெறலாம்; குறிப்பு, தொடர்புடைய மற்றும் "பாதிக்கக்கூடிய ஆவணத்தை சரிசெய்யவோ அல்லது முரண்படவோ, பாதிக்கப்பட்ட நபர் மட்டுமே நேர்மையான சந்தர்ப்பம் பெற்றிருக்கின்றார்." *உள்ளாட்சி வாரியம் (லோக்கல் கவர்மெண்ட் போர்டு) -எதிர்- அர்லிட்ஜ்*[7] என்ற வழக்கில் லார்ட் சான்செல்லர் அவர்களின் சொற்பொழிவின் பின்வரும் பத்தியானது எதிரானதும் மற்றும் அறிவுறுத்துவதாகும்:

> "மாண்புமிகு நீதியரசர்களே! தரப்பினர்களுக்கு இடையிலான பிரச்சினைக்குரிய வினாவானது முடிவிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள நிர்வாக

---

6. (1911) எ.சி. 179, 182
7. (1915) எ.சி. 120, 133

அமைப்பின் நிலைப்பாட்டு கருத்திற்கு நான் உடன்படுகின்றேன். நான் கூறியிருப்பதுபோன்று, அதன் விசாரணையின் முடிவானது, அதன் சாதாரண நடைமுறையானது எட்டப்படுவதற்கு, சட்டத்தில் அதற்குமாறான பணித்தல் ஏதுமில்லாதநிலையில் மேற்கொள்ளப்படவேண்டும். உள்ளாட்சித் துறை வாரியத்தைப் பொறுத்தவரை இந்நடைமுறை என்ன என்பதில் ஐயமேதுமில்லை. வாரியத்தின் தலைமையிலுள்ள அமைச்சர், பிற அமைச்சர்களைப்போன்று நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பானவர். அவர், தான் செய்வதற்கு மட்டுமின்றி, அவருடைய துறையில் செய்யப்படும் அனைத்துச் செயல்களுக்கும் பொறுப்பானவர். அவரிடம் ஒப்படைக்கப்படும் பணியின் அளவு மிகுதியானதாகும், அம்மிகுதியானப் பெரும்பணியைத் தானே அவர் செய்யமுடியாது. அவர், தம்முடைய ஆவணங்களைத் தன்னுடைய அதிகாரிகள் மூலம் பெற்று, அவர் தாமாகவே ஆவணங்களை முறையாகப் பெற்றதுபோன்று அன்று அவர் தம்முடைய கடமைகளை நிறைவேற்ற எதிர்ப்பார்க்கப்படுகின்றார். இதற்கும் அப்பால் அவருடைய கடமையை நீட்டிக்க முயற்சிப்பதும் மற்றும் அவரும் வாரியத்தின் பிற உறுப்பினர்களும், ஒவ்வொன்றையும் தாமே நிறைவேற்ற வற்புறுத்துவதும், அவருடைய திறமையைக்

குறைப்பதாகும். மாறாக, நீதிமன்றத்திலுள்ள ஒரு நீதிபதியானவர், அவர் சுதந்திரமானவர் மட்டுமல்ல, தன்னுடைய பணியாளர்களின் உதவிகளைச் சார்ந்திருக்குமாறு அவர் நிர்பந்திக்கப்படுகிறார்."

10. ***யூனியன் ஆ.:ப் இந்தியா மற்றும் ஒருவர் -எதிர்- பி.கே. ராய் மற்றும் பலர்***[8] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் மற்றொரு அரசமைப்பு அமர்வானது கீழ்க்காணுமாறு வரையறுத்தது:-

"... ... வேறு சொற்களில் கூறுவதானால், பணி ஒப்படைக்கப்பெற்றவர் முன்னேற்பாடு செய்யவும் மற்றும் துவக்க முடிவு எடுக்கவும் சட்டப்பூர்வ அதிகாரி, அதிகாரமளித்து, ஆனால், எடுக்கப்பட்ட முடிவை அங்கீகரிக்கவும், நிராகரிக்கவுமான அதிகாரத்தை தன்னிடம் நிறுத்திக்கொள்வாரெனில், அந்த முடிவானது அவருடைய சொந்த முடிவாக மதிக்கப்படுவதற்கு அவ்வதிகாரியால் பராமரிக்கப்படும் கட்டுப்பாட்டு அளவானது போதுமானதெனில் செல்லத்தக்க முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தீர்ப்பளிக்கப்படும். தற்பொழுதைய வழக்கில் காணப்படும் பொருண்மையின் தறுவாயில், "மைய அரசினால் தன்னுடைய சட்டப்பூர்வ அதிகாரங்கள் மற்றும் கடமைகள் முறையின்றி ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே,

---

8. (1968) 2 எஸ்.சி.ஆர். 186

1962-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ஆம் தேதியிடப்பட்ட இறுதி தரப்பட்டியலானது சட்டத்திற்க்கு அப்பாற்பட்டது மற்றும் சட்ட விரோதமானது" எனத் தீர்ப்பளித்ததில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டதென நாங்கள் கருதுகின்றோம். ஒருங்கிணைத்தல் பணியானது, முற்றிலும் மைய அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற அனுமானத்தின் அடிப்படையிலுங்கூட, தற்பொழுதைய வழக்கில் ஒருங்கிணைத்தல் விடயத்தில் மைய அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், அதன் அவசிய சட்டப்பூர்வ பணிகளை ஒப்படைத்தலாகாது என நாங்கள் கருதுகின்றோம். பணிகளை ஒருங்கிணைத்தல் விடயத்தில் ஏதேனும் விதத்தில் மாநில அரசின் உதவியைப் பெறுவதில் மைய அரசை தடுப்பதாக மேற்படி சட்டப்பிரிவுகள் 115 அல்லது 117-இல் ஏதுமில்லை. உச்சக்கட்ட ஒருங்கிணைத்தல் பணியானது மைய அரசின் அனுமதி மற்றும் அங்கீகாரத்துடன் செய்யப்படும்வரையில் மற்றும் இவ்விடயத்தில் மாநில அரசுகளின் செயல்பாடுகள் மீது மைய அரசானது பொதுவான கட்டுப்பாட்டை செயல்படுத்தும்வரையில், "அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" என்ற கோட்பாட்டின் யாதொரு மீறலும் இருப்பதாகத் தீர்ப்பளிக்கப்படமுடியாது.

எடுத்துக்காட்டாக, *பிரத்வட் குமார் போஸ் -எதிர்- மாண்புமிகு கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி*[9] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டது."

11. ***ஸ்டேட் ஆ.:ப் பம்பாய் (மஉறாராஷ்டிரா) -எதிர்- சிவ்பாலக் கௌரிசங்கர் துபே மற்றும் பலர்***[9] என்ற வழக்கில் "1948-ஆம் ஆண்டைய பம்பாய் வாடகை மற்றும் விவசாய நிலங்கள் சட்டம், பிரிவு 65(1)-இன் கீழான விசாரிக்கும் கடமையை மாநில அரசு ஒப்படைத்திருக்கக்கூடாது" என்ற உயர் நீதிமன்றத்தின் முடிவானது மேல்முறையீட்டிலிருந்தது. மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நீக்கறவு செய்கையில் கருத்து தெரிவிக்கப்பட்டதாவது:-

"உயர் நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்ட முடிவின் குறைபாட்டை உணர்ந்து, திரு. பதாக், வேறொரு காரணத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் முடிவை ஆதரிக்க முயன்றார். விசாரணையானது, சட்டப்பிரிவு 65-இன் கீழ் துணை ஆட்சியரால் நடத்தப்படாமல், கிராம நிருவாக அலுவலர் (தலாதி) மற்றும் வருவாய்த் துறை தலைமை அலுவலர் (மம்லாடார்) ஆகியோரால் நடத்தப்பட்டதையடுத்து துணை ஆட்சியரால் (டெபுடி கலெக்டர்) அளிக்கப்பட்ட உறுதியானது செல்லத்தக்கதல்ல என அவர் வாதிட்டார். வேறு சொற்களில் கூறுவதானால்,

---

9. (1965) 1 எஸ்.சி.ஆர். 211

மாநில அரசானது, தன்னுடைய அதிகாரங்களை சட்டப்பிரிவு *65(1)*-இன் கீழ் செல்லத்தக்கவாறு துணை ஆட்சியரிடம் ஒப்படைத்திருக்கலாம்; ஆனால் மாநில அரசின் அதிகாரங்களை ஒப்படைக்கப்பெற்றவரான துணை ஆட்சியர், மீண்டும் தன்னுடைய அதிகாரத்தின் ஒரு பகுதியை தன்னுடைய கீழ் பணியாளருக்கு ஒப்படைக்க முடியாது. தற்பொழுதைய வழக்கில் அவர் செய்திருக்கின்றார் என்பது அவருடைய வாதமாகும். பிரிவு *65(1)*-இன் கீழ் தன்னுடைய அதிகாரங்களை செயல்படுத்துவதில், துணை ஆட்சியர் தாமே விசாரணையை நடத்தவேண்டுமேயன்றி, அத்தகைய விசாரிக்கும் பணியை தன்னுடைய கீழமை வருவாய் அலுவலர் எவரிடமும் ஒப்படைக்கமுடியாது. தலைமையிலிருந்து அதிகாரங்களை ஒப்படைக்கப் பெற்றவர், தன்னுடைய அதிகாரத்தை தனக்கு கீழமை அலுவலரிடம் ஒப்படைக்கமுடியாது என்பதில் ஐயமேதுமில்லை. ஆனால், தற்பொழுதைய வழக்கில் அரிதாக ஒப்படைப்பு வினா உள்ளது. பிரிவு *65(1)* கோருவதெல்லாம் மாநில அரசானது, அதன் ஒப்படைப்பாளர் அத்தகைய விசாரணையை முடித்த பின்னர், தான் உகந்ததாகக் கருதுவதுபோன்று, நிலத்தின் மேலாண்மை கைகொள்ளப்படவேண்டும். வேறுசொற்களில்

கூறுவதானால், எவ்வடிவத்தில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்பது முற்றிலும் மாநில அரசு அல்லது அதன் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பெற்றவரின் விருப்பத்திற்கு விடப்படுகிறது. தற்பொழுதைய வழக்கில், துணை ஆட்சியர் செய்திருப்பதெல்லாம் விசாரணை நோக்கிற்கு தொடர்புடைய ஆவணங்களை சேகரிக்க தன்னுடைய கீழமை அலுவலரைப் பணிப்பதுதான். கிராம நிருவாக அலுவலர் (தலாத்தி) தளத்திற்குச்சென்று, எதிர்மேல்முறையீட்டாளர்களின் நிலங்கள் தேவையான காலத்திற்கு தரிசு நிலங்களாக இருந்தனவா? என்பதை உறுதிசெய்தார். அவர், தம்முடைய அறிக்கையை வருவாய் தலைமை அலுவலரிடம் (மம்லாடார்) சமர்ப்பித்தார். வருவாய் தலைமை அலுவலர் (மம்லாடார்) தன்னுடைய அறிக்கையை துணை ஆட்சியரிடம் சமர்ப்பித்தார். வேறு சொற்களில் கூறுவதானால், துணை ஆட்சியர் செய்திருப்பதெல்லாம் தொடர்புடைய ஆவணத்தை சேகரிக்கவும், அதன்மூலம் நிலங்கள் தரிசு நிலங்களாக உள்ளனவா? இல்லையா? என்பது தொடர்பான வினாவை விசாரிப்பதற்காகத்தான். எங்களுடைய கருத்தில், இந்நடைமுறையானது, எவ்விதத்திலும் ஒப்படைப்பதான வினாவை தொடர்புபடுத்தவில்லை. விசாரணையின் வடிவம் மற்றும் அதன் முறை ஆகிய அனைத்தும்

துணை ஆட்சியரின் விருப்பத்தைச் சார்ந்ததாகும். துணை ஆட்சியர், விவசாய நிலங்களுக்குச்சென்று அவை தரிசு நிலங்களாக உள்ளனவா? என்பது குறித்து விசாரிக்கவேண்டுமென பிரிவு 65(1) கோரவில்லை. அவர் விரும்புவாரெனில், அவரே சான்றை பதியலாம் அல்லது சான்றை பதிதல் மற்றும் கள ஆய்வு செய்தல் ஆகியவை கீழமை அலுவலரிடம் விடப்படலாம். அத்தகைய உள்ளூர் ஆய்வறிக்கை மற்றும் அதைச்சார்ந்து சேகரிக்கப்பட்ட சான்றுப் பதிவு ஆகியவை துணை ஆட்சியருக்கு அனுப்பப்படும், அவையே, அவர் விசாரணை நடத்துவதற்கான ஆவணமாகும். ஆவணத்தை சேகரிக்கும் பணியானது, கீழமை வருவாய் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளபொழுதிலும் இவ்வாறாக விசாரணையானது துணை ஆட்சியரால் நடத்தப்படுகிறது. அத்தகைய வழக்கில், "ஒப்படைக்கப்பெற்றவர் ஒப்படைக்க முடியாது" என்ற கோட்பாடு எவ்வாறு செயல்பாட்டிற்கு வருகிறது என நாங்கள் காணவில்லை."

12. ***சானி சில்க் மில்ஸ்***[4] என்ற வழக்கில், சட்ட வினாவானது, கழகத்தினால் சில குறிப்பிட்ட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பெற்றுள்ள அலுவலரோ அல்லது அதிகாரியோ, மேற்படி அதிகாரங்களை மேலும் மறு ஒப்படைப்பு செய்யமுடியுமா? என்பதாகும். அது இவ்வாறாக இந்நீதிமன்றத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது:-

"5. சாதாரணமாக, சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அல்லது அமைப்புகளால் அதிகாரங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதில் நீதிமன்றங்கள் கடுமையாக உள்ளன. எந்த அதிகாரியிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறதோ? அவரே அவ்வதிகாரத்தை செயல்படுத்தவேண்டும் என்பதும், அவரன்றி வேறொருவரால் செயல்படுத்தப்படக்கூடாது என்பதும் அவசியமாகும். அதேநேரத்தில், தற்பொழுதைய நிர்வாக அமைப்பில், ஒப்படைத்தலுக்கு நீதித்துறையின் அதிகபட்ச வெறுப்பானது உச்சநிலைக்குக் கொண்டுசெல்லப்படமுடியாது. அரசுத் துறையானது தன்னுடைய அதிகாரத்தை செயல்படுத்த முகமையை நியமித்துக்கொள்ள சுதந்திரமுடையதாகும். அதனால்தான், பல கட்டங்களில், ஒப்படைத்தலானது வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ அங்கீகரிக்கப்படுகிறது. சட்டப்பூர்வ அதிகாரிகளால் கையாளப்படவேண்டிய நடவடிக்கைகள் பெருமளவில் எழுவதால், அதிகப்படியாக "அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" என்ற கோட்பாடானது குறிப்பாக உள்ளது.

6. இப்பொழுது எந்தவொரு சட்டப்பூர்வ அமைப்பும் தம்முடைய அதிகாரத்தை வேறொரு அதிகாரிக்கு ஒப்படைக்க, சட்டம் அனுமதிக்கமுடியும் என்பது பெரும்பாலும் தீர்வுசெய்யப்பட்ட ஒன்றாகும்; நிச்சயமாக, சட்டத்திலேயே

அக்கொள்கையானது தெரிவிக்கப்பட்ட பின்னர், அத்தகைய ஒப்படைக்கப்பெற்றவர் அதன் வரையறைக்குட்பட்டு தன்னுடைய அதிகாரத்தை செயல்படுத்தவேண்டும். மறு ஒப்படைப்பு இருக்கும்பொழுதுதான் உண்மைப் பிரச்சினை முரண்பாடு எழுகிறது. ஒரு பணியை நிறைவேற்ற நாடாளுமன்றமானது குறிப்பாக ஒரு அதிகாரியை நியமித்தபொழுது, அவ்வதிகாரியானவர், வேறொரு நபருக்கு தன்னுடைய அதிகாரத்தை ஒப்படைத்து, அவ்விடத்தில் செயல்படவைக்க சுதந்திரமுடையவரென ஏற்கெனவே யூகிக்கப்படமுடியாது. *பரியம் கெமிக்கல் லிமிடெட் -எதிர்- கம்பெனி லா போர்டு*[10] என்ற வழக்கில் மறு ஒப்படைப்பு தொடர்பாக இந்நீதிமன்றம் கூறியதாவது:

> "ஒப்படைப்பு அதிகாரத்தை மறு ஒப்படைப்பு செய்ய இயலாது என்னும் சூத்திரத்தை மனதிற்கொண்டு வெளிப்படையான விதி அல்லது தேவையான சட்ட சேர்க்கையின் மூலம் அனுமதிக்கப்படுமெனில், மறு ஒப்படைப்பானது நிலைநிறுத்தப்படமுடியும் என குறிப்பிடுகிறது."

---

10. ஏ.ஐ.ஆர். 1967 எஸ்.சி. 295 : 1966 சப்ளி. எஸ்.சி.ஆர். 311

7. மீண்டும், *மங்குலால் சுனிலால் -எதிர்- மணிலால் மகன்லால்*[11] என்ற வழக்கில், பம்பாய் மாகாணம் நகராட்சி சட்டம், (59/1949) பிரிவு 481(1)(அ)-ஐ பரிசீலிக்கையில் அகமதாபாத் மாநகராட்சி ஆணையர் தன்னுடைய அதிகாரத்தையும் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கெதிராக சட்டம் அல்லது விதிகளின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கும் செயல்பாட்டையும் மேற்படி சட்டத்தின் கீழ் நகராட்சி அலுவலருக்கு ஒப்படைத்திருந்தார்; அத்தகைய செயல்பாடுகள் ஒப்படைக்கப்பெற்ற அவ்வலுவலர், அவற்றை மேலும் மற்றொருவருக்கு ஒப்படைக்கப்படமுடியாது என இந்நீதிமன்றம் கூறியது.

8. அத்தகைய அதிகாரம் ஒப்படைப்பு தொடர்பாக, *இங்கிலாந்தின் உறால்ஸ்பெரி சட்டங்கள்*, 4-ஆம் பதிப்பு, தொகுதி-I-இல் கூறப்பட்டிருப்பதாவது:

> "ஒப்படைப்பு அதிகாரத்தை மறு ஒப்படைப்பு செய்யவியலாது என்னும் சூத்திரத்திற்கிணங்க, சட்டப்பூர்வ அதிகாரமானது எந்த அமைப்பு அல்லது அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, அவ்வமைப்பு அல்லது அலுவலராலேயே செயல்படுத்தப்படவேண்டும்,

---

11. ஏ.ஐ.ஆர். 1968 எஸ்.சி. 822 : (1968) 2 எஸ்.சி.ஆர். 401

(உறச். லேவெண்டர் & சன் லிமிடெட் -எதிர்- வீடு மற்றும் உள்துறை அமைச்சர்[12]), வெளிப்படையான சொற்கள் அல்லது சட்ட சேர்க்கையின் மூலம் மறு ஒப்படைப்பானது அங்கீகரிக்கப்பட்டாலன்றி *(சுங்கம் மற்றும் தீர்வை ஆணையர் -எதிர்- கியூர் & டீலே லிமிடெட்[13]* மற்றும் *மங்கொனி -எதிர்- வடக்கு ரொடிசியா தலைமை அரசு வழக்குரைஞர்[14])* உட்கிடையாக மறு ஒப்படைப்பை அங்கீகரிப்பதற்கான சட்டப்பூர்வ அல்லது நீதித் துறை சார்ந்த அல்லது ஒழுக்க நடவடிக்கை அதிகாரத்தை யூகிப்பதற்கு எதிராக உறுதியான அனுமானம் உள்ளது; அதுவே, எந்த அதிகாரத்தையும் செயல்படுத்த நியமிக்கப்பட்ட அமைப்பானது தன்னுடைய சொந்த அறிவைப் பயன்படுத்தவேண்டும் என கூறப்படுகிறது *ஆலம் & கோ -எதிர்- ஐரோப்பா போஸ்டர் சர்வீஸஸ் லிமிடெட்[15]. ..."*

9. *உறரிஷங்கர் பேக்லா -எதிர்- மத்திய பிரதேச மாநில அரசு[16]* என்ற வழக்கில், 1946-ஆம் ஆண்டைய அவசர

---

12. (1970) 3 ஆல். இ.ஆர். 871 : (1970) 1 டபுள்யூ.எல்.ஆர். 1231
13. (1962) 1 க்யூ.பி. 340 : (1961) 3 ஆல். இ.ஆர். 641 : (1961) 3 டபிள்யூ.எல்.ஆர். 798
14. (1960) 1 ஆல். இ.ஆர். 446 : (1960) 2 டபிள்யூ.எல்.ஆர். 389 : 1960 எ.சி. 336, பி.சி.
15. (1968) 1 ஆல். இ.ஆர். 826 : (1968) 1 டபிள்யூ.எல்.ஆர். 638
16. ஏ.ஐ.ஆர். 1954 எஸ்.சி. 465, 468 : (1955) 1 எஸ்.சி.ஆர். 380

வழங்கல்கள் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டப்பிரிவு 4-இன் வரம்பை ஆய்வு செய்கையில் கூறப்பட்டதாவது:-

"தனக்குக் கீழான ஏதேனும் அலுவலர், அதிகாரிக்கு அல்லது மாகாண அரசுக்கு அல்லது மாகாண அரசுக்கு கீழான ஏதேனும் அலுவலர் அல்லது அதிகாரிக்கு, மைய அரசினால் பணிக்கப்படுவதில் குறிப்பிடப்படுவது போன்று, பிரிவு 3-இன் கீழ் உத்தரவுகளைப் பிறப்பிக்கும் தன்னுடைய சொந்த அதிகாரத்தை ஒப்படைக்க, சட்டப்பிரிவு 4 அதிகாரம் அளிக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில் அப்பிரிவானது பழித்துரைக்கப்பட்டது. வேறு சொற்களில் கூறுவதானால், ஒப்படைப்புபெற்றவர் பிரிவு 3-இன் கீழான அதிகாரத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை வேறு ஒருவருக்கு மறு ஒப்படைப்பு செய்ய அங்கீகரித்துள்ளது. பிரிவு 3-இன் கீழான அதிகாரத்தைச் செயல்படுத்தும் அலுவலர் அல்லது அதிகாரி யார் என்பதை குறிப்பிடுவது சட்டத்தைச் சார்ந்ததாகும். அதிகாரத்தை எந்த அலுவலர் அல்லது அதிகாரி செயல்படுத்துவார் என்பதைக் கூற மைய அரசிற்கு அதிகாரத்தை அளிப்பது சட்டத்தைச் சார்ந்ததல்ல என திரு. அம்ரிகர் வாதிட்டார்.

இதுதொடர்பாக, ஐக்கிய அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்தின் இரு தீர்ப்புரைகள் பார்வையிடப்பட்டன. அவை, *யுனைடெட் ஸ்டேட் ஆ.:ப் அமெரிக்கா - பனாமா ரீபைனிங் & கோ -எதிர்- ராயன்*[17] மற்றும் *ஷெக்டேர் -எதிர்- யுனைடெட் ஸ்டேட்ஸ்*[18]. இவ்விரு வழக்குகளிலும், கொள்கையானது வகுக்கப்பட்டு மற்றும் சட்டத்தினால் தரமானது நிறுவப்பட்டவரையில், பரிந்துரைக்கப்பட்ட வரையறைக்குள் துணை விதிகளை உருவாக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பிடம் விடப்படுவதில், நிபந்தனையற்ற சட்டம் இயற்றும் அதிகாரம் ஒப்படைப்பு மற்றும் சட்டத்தினால் அறிவிக்கப்பட்டதுபோன்று கொள்கை பொருந்தும், பொருண்மைகளைத் தீர்மானித்தல் ஆகியவை உள்ளடக்கப்படுவதில்லை. மைய அரசினால் எப்பிரிவு நபர்களுக்கு அதிகாரமானது மைய அரசினால் ஒப்படைக்கவோ அல்லது மறு ஒப்படைவு செய்யப்படவோ முடியும் என்பதை பிரிவு 4 பட்டியலிடுகிறது என நாங்கள் நினைப்பதுபோன்று, எங்கள் தீர்ப்புரையிலுள்ள இம்முடிவுகள் திரு. அம்ரிகர் அவர்கள் வாதத்திற்கு உதவவில்லை மற்றும் துணை அமைப்புகள் சட்டத்தினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவில்லை என கூறுவது சரியல்ல."

---

17. (1934) 293 யு.எஸ். 388 : 79 எல். இ.டி. 446
18. (1934) 295 யு.எஸ். 495 : 79 எல். இ.டி. 1570

மேற்கூறப்பட்ட வழக்கில், மறு ஒப்படைப்பானது உறுதிசெய்யப்பட்டது; ஏனெனில், எப்பிரிவுகளின் நபர்களுக்கு அதிகாரமானது மைய அரசினால் ஒப்படைக்கப்படவோ அல்லது மறு ஒப்படைப்பு செய்யப்படவோ முடியும் என்பதை பிரிவு 4 பட்டியலிடுகிறது.

10. தற்பொழுதைய பிரிவு 94(அ)-ஐ பொறுத்தவரையில், மாநகராட்சியானது அதன் தரப்பில் உருவாக்கப்பட்ட ஏதேனும் விதிமுறைக்குட்பட்டு, தன்னால் (மாநகராட்சியால்) செயல்படுத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் குறிப்பிட்ட அல்லது ஏதேனும் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை, அத்தகைய விடயங்கள் அல்லது நிபந்தனைகளுக்குட்பட்டு, "மாநகராட்சிக்கு கீழான அலுவலர் அல்லது அதிகாரியால் செயல்படுத்தப்பட பணிக்கலாம்" என அது கூறுகிறது. மாநகராட்சியினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அதன் கீழான அலுவலர் அல்லது அதிகாரியானவர், அவ்வதிகாரம் அல்லது செயல்பாட்டை நிறைவேற்ற வேறொரு அலுவலர் அல்லது அதிகாரியை அங்கீகரிக்க பிரிவு 94(அ) குறிப்பிட்டு கூறவில்லை. ஆனால், 28.2.1976-ஆம் தேதியிடப்பட்ட தீர்மானத்தின் மூலம், மாநகராட்சியானது தலைமை இயக்குநருக்கு சட்டப்பிரிவு 85(ஆ)(1)-இன் கீழான தன்னுடைய அதிகாரத்தை மட்டுமே ஒப்படைக்கவில்லை. மேற்படி அதிகாரத்தைச் செயல்படுத்த

வேறொரு அதிகாரியை அங்கீகரிக்கவும் அவருக்கு (தலைமை இயக்குநர்) அதிகாரம் அளித்துள்ளது. மாநகராட்சியானது, தனக்குக் கீழான ஏதேனும் அலுவலர் அல்லது அதிகாரிக்கு, தன்னுடைய ஏதேனும் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை ஒப்படைக்கவும் மற்றும் அவ்வலுவலர் அல்லது அதிகாரியானவர், அவ்வதிகாரத்தைச் செயல்படுத்த வேறொரு அலுவலர் அல்லது அதிகாரிக்கு மறு ஒப்படைப்பு செய்யவும், சட்டப்பிரிவு 94(அ) மாநகராட்சியை இயல்விக்கிறதென தீர்ப்பு அளிக்கப்பட்டாலன்றி, 28.2.1976-ஆம் தேதியிடப்பட்ட தீர்மானத்தின் இறுதி பகுதியானது சட்டப்பிரிவு 94(அ)-இன் வரம்பிற்குள் இருப்பதாக தீர்ப்பளிக்கப்படமுடியாது. எங்களைப் பொறுத்தவரையில், நாடாளுமன்றமானது, சட்டத்தின் பிரிவு 94(அ)-ஐ அறிமுகப்படுத்துகையில், மாநகராட்சிக்குக் கீழான வெவ்வேறு அலுவலர்கள் அல்லது அதிகாரிகளுக்கு நேரடியாக அதிகாரத்தை ஒப்படைப்பதை மட்டுமே கருதியது. அத்தகைய அதிகாரம் ஒப்படைக்கப்பெற்றவர் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைச் செயல்படுத்த வேறேதேனும் அலுவலர் அல்லது அதிகாரியை அங்கீகரிப்பதன் மூலம் அவ்வதிகாரத்தை மறு ஒப்படைப்பு செய்வதற்கு வரம்பேதும் இல்லை."

13. ***சித்தார்த்தா சாரவ்கி -எதிர்- கல்கத்தா துறைமுகத்திற்கான அறங்காவர்கள் குழுமம் மற்றும் பலர்***[19] வழக்கானது இந்நீதிமன்றத்தினால் கீழ்க்காணுமாறு கையாளப்பட்டது:-

> "5. சிலவற்றை செய்ய நபர் அல்லது அமைப்பிற்கு சட்டம் சாராத/நிருவாகம் சாராத அதிகாரங்கள் ஒப்படைத்தல் தொடர்பாக அதிகாரம் ஒப்படைக்கப்பெற்றவர், அத்தகைய செயல்பாடுகளைத் தாமே நிறைவேற்றவேண்டியுள்ளதா? அல்லது ஒப்படைத்தல் வாசகத்தின்படி முடிவெடுத்த பின்னர், மேற்படி முகமையானது அதன் நிறைவேற்றலுக்காக, பிறர் எவருக்கும் அதிகாரம் அளிக்கமுடியுமா? என்பதே பரிசீலிக்கப்படவேண்டிய வினாவாகும். ஒருமுறை அதிகாரம் அளிக்கப்பட்டுவிட்டால், மேற்படி அதிகாரத்தைச் செயல்படுத்திய பின்னர், மேற்கொள்ளப்பட்ட முடிவை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்பது, நடைமுறையைச் சார்ந்ததாகும். சட்டமானது, சட்டக் கோட்பாட்டை வகுத்து பின்னர் கொள்கை நிறைவேற்றுதல் தொடர்பாக நிருவாக அமைப்பிற்கு தன்விருப்ப உரிமையளித்து, அக்கோட்பாட்டு வரம்பிற்குட்பட்டு விரிவாகச் செயற்படுத்த, முகமைக்கு[20]

---

19. (2014) 16 எஸ்.சி.சி. 248

20. கம்பாலியா மாநகராட்சி -எதிர்- குஜராத் மாநில அரசு, ஏ.ஐ.ஆர். 1967 எஸ்.சி. 1048-இல் பக்கம் 1051, பத்தி 7

விட்டுவிடவேண்டும். முடிவெடுக்கும் அவசிய செயல்பாடானது அதிகாரம் ஒப்படைக்கப்பெற்றவரால் நிறைவேற்றப்படுவதைப் பொறுத்தவரையில், துணை மற்றும் எழுத்துசார் பணியை நிறைவேற்றும் சுமையானது, முதன்மை அதிகாரம் ஒப்படைப்பவரால் சுமக்கப்படத் தேவையில்லை. முதன்மை அதிகாரம் அளிக்கப்பட்டவரே அமைச்சுப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றவேண்டுமென்பது தேவையற்றது. அதிகாரம் ஒப்படைப்பின்படி, முதன்மை அதிகாரம் அளிக்கப்பட்டவரால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவை செயல்படுத்துவதைத் தொடர்ந்து, அமைச்சுப் பணி அல்லது எழுத்துசார் பணிகள், அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் நிறைவேற்றப்படலாம். நவீன கால நிருவாகத்தின் உட்சிக்கல் மற்றும் பொருளாதாரம் மற்றும் சமூகத் துறையில் அரசுப் பணியின் விரிவாக்கம் ஆகியவை சூழ்நிலை கோரும்பொழுது, சட்டமானது பல்வேறு அதிகாரிகளுக்கு பரந்த அதிகாரங்களை அளிக்கிறது. இன்றைய அரசுப் பணிகள் மிகுந்த சிக்கலானவை, அதிகாரங்கள் ஒப்படைப்பு தேவையானது தவிர்க்க முடியாததாக்கியுள்ளது. நிருவாகத் தலைமையானது ஒவ்வொரு பணியையும் நிறைவேற்ற எதிர்ப்பார்க்கப்பட முடியாது.

... ...

7. சட்டப்பூர்வ அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள முடிவெடுக்கும் அதிகாரியானவர், சூழ்நிலைகோரும்பொழுது பணியை ஒப்படைக்க, நிருவாக நடைமுறை தேவைகள் அல்லது நெருக்கடி நிலைகள் பணிக்கின்றன. இவ்வாறாக, அதிகாரியால் அளிக்கப்பட்ட அதிகாரத்தைச் செயல்படுத்துவதைத் தொடர்ந்து, நிருவாக அல்லது அமைச்சுப் பணிகளை கீழமை அதிகாரிகள் நிறைவேற்றுவதில் "அளிக்கப்பட்ட அதிகாரத்தை மறு ஒப்படைப்பு செய்யவியலாது" என்ற சூத்திரம் விலகிநிற்கிறது."

14. கீழ்க்காணும் கோட்பாடுகள் இந்நீதிமன்றத்தின் முடிவுகளிலிருந்து தொகுக்கப்படமுடியும்: (i) அதிகாரத்தைச் செயல்படுத்தும் சட்டப்பூர்வ செயல்பாட்டாளர், விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க, பொறுப்புவாய்ந்த மற்றும் தகுதிவாய்ந்த அலுவலரை நியமிப்பதாலேயே, அது ஒரு நிருவாக அதிகாரம் எதையும் செயல்படுத்தும் சாதாரண வடிவம் என்பதால், அவர் தன்னுடைய செயல்களை ஒப்படைத்துவிட்டதாகக் கூறப்படமுடியாது; (ii) சட்டப்பூர்வ அதிகாரியானவர், அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் ஒப்படைக்கப்பட்ட விடயங்களில் ஆரம்பக்கட்ட முடிவு எடுக்கவும், அதிகாரமளித்து, ஆனால் முடிவெடுக்கப்பட்ட பின்னர், அதனை அங்கீகரிக்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை தன்னுடைய கையில் நிறுத்திக்கொள்வாரெனில், முடிவானது அதிகாரியின் சொந்த முடிவாகக் கருதப்படுவதற்கு, அதிகாரியால் பராமரிக்கப்படும்

கட்டுப்பாட்டு அளவு போதுமானதெனில், அந்த முடிவானது செல்லத்தக்கவகையில் எடுக்கப்பட்டிருப்பதாகத் தீர்ப்பளிக்கப்படும்; (iii) மறு ஒப்படைப்பு விடயங்களிலுங்கூட முடிவெடுக்கும் அவசியப் பணியானது அதிகாரம் அளிக்கப்பட்டவரால் நிறைவேற்றப்படும்வரையில், துணை மற்றும் எழுத்துசார் பணிகளை நிறைவேற்றும் சுமையானது, முதன்மை அதிகாரம் அளிக்கப்பட்டவரால் சுமக்கப்படத் தேவையில்லை மற்றும் முதன்மை அதிகாரம் அளிக்கப்பட்டவரே அமைச்சுப் பணிகளை நிறைவேற்றவேண்டுமென்பது அல்ல; மற்றும் (iv) சட்டப்பூர்வ அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள முடிவெடுக்கும் அதிகாரியானவர், சூழ்நிலை கோரும்பொழுது பணியை ஒப்படைக்க, நிருவாக நடைமுறைத் தேவைகள் அல்லது நெருக்கடி நிலைகள் பணிக்கின்றன.

15. விதிகளின் விதி *11(அ)*-ஆனது ஏதேனும் அரசு அலுவலர் அல்லது அதிகாரியிடமிருந்து ஏதேனும் தகவல் அல்லது ஆவணத்தைக் கோரவும் மற்றும் அரசு அலுவலகம் அல்லது அமைப்பின் ஏதேனும் உறுப்பினரிடமிருந்து கூற்றை பதியவும் அல்லது அரசு அலுவலகம் அல்லது அமைப்பின் ஏதேனும் உறுப்பினரிடம் ஆய்வு செய்யவும் மற்றும் கூற்றை பதியவும், மேல்முறையீட்டு அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட கோட்பாடுகளின் வரிசையில், அத்தகைய அதிகாரத்தைச் செயல்படுத்துவதில், மேல்முறையீட்டு அதிகாரியானவர் ஏதேனும் தகவல் அல்லது ஆவணம் அல்லது ஏதேனும் தரவுகள் கோருவாரெனில், அதுவே, அவசியப் பணியை ஒப்படைத்தலாகாது எனக் கூறப்படமுடியும். அத்தகைய அதிகாரத்தின்படி, மேல்முறையீட்டு அதிகாரியானவர் சில பொருண்மைகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு பொறுப்புவாய்ந்த அலுவலரை

நியமிப்பாரெனில், அது மேல்முறையீட்டாளரிடம் அளிக்கப்பட்ட அதிகாரத்தைச் செயல்படுத்தும் ஒரு சாதாரண முறையாகும். ஆய்வு செய்த பின்னர் தகவல்களைச் சேகரித்தல் போன்ற பணிகளை ஒப்படைக்க, மேல்முறையீட்டு அதிகாரிக்கு இயலவேண்டுமென்பதை நடைமுறைத் தேவைகளும் மற்றும் நிருவாக நெருக்கடிகளும் கோருகின்றன. அவசியப் பணியைப் பொறுத்தவரையில், அதாவது, தேவையான அனைத்து பொருண்மைகள் மற்றும் தரவுகள் ஆகியவற்றைப் பரிசீலித்து, முடிவெடுக்கப்பட்ட பின்னர் மேல்முறையீட்டு அதிகாரியால் நிறைவேற்றப்படுகிறது, துணைப் பணிகளை நிறைவேற்றும் சுமையானது மேல்முறையீட்டாளரால் சுமக்கப்படத்தேவையில்லை.

16. சட்டப்பிரிவு 76(அ)-இன் அடிப்படையிலான வாதமானது முற்றிலும் தவறாக வைக்கப்பட்டதாகும் மற்றும் ஏற்கத்தகாததாகும். பிரிவு 76(அ)-ஆனது கீழே வசதிக்காக மேற்கோள்காட்டப்படுகிறது:

> "76(அ). **குறிப்பிட்ட அதிகாரங்களை அளித்தல்** - மாநில அரசானது, அரசிதழில் அறிவிப்பின் மூலம் அதிகாரம் அளிக்கலாம் -
>
> (அ) அதற்கு வழங்கப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் அதிகாரங்கள், பிரிவுகள் 2(9), 33(3)(பி), 70(1), 74 மற்றும் 78 மூலம் தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அலுவலருக்கு வழங்கப்படுகின்றன; மற்றும்

(ஆ) தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அலுவலருக்கு வழங்கப்பட்ட அனைத்து அல்லது சில அதிகாரங்கள், பிரிவுகள் *45(1), (2), 56(1)* மற்றும் *70(2)* ஆகியவற்றின் மூலம் அரசிதழில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டவாறு அவருடைய கீழமை அலவலருக்கு அளிக்கப்படுகின்றன."

பிரிவு *76(அ)*-ஆனது *1914*-ஆம் ஆண்டைய *(சட்ட எண் IV/1914)* அதிகாரப் பரவலாக்கச் சட்டம் மூலம், முதன்மைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. பதிவு *44*-இல் சட்டத் தலைப்பானது, "பிற முத்திரைக் கட்டணங்கள் அல்லாது நீதித் துறைச்சார் கட்டணங்கள் மூலம் வசூலிக்கப்படும் முத்திரைக் கட்டணங்களாகும் *(ஆனால்* முத்திரைக் கட்டணங்கள் விலை நீங்கலாக)". அரசமைப்புச் சட்டத்தின் அட்டவணை VII-இல் பொது அதிகாரப்பூர்வமான பட்டியலில் உள்ளது. *1967*-ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் எண் *24/1967*-ஐ தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றியதன் மூலம், சட்டப்பிரிவு *47(அ)*-ஆனது முதன்மை சட்டத்தில் சேர்க்கப்பட்டது மற்றும் அச்சட்டமானது *1968*-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் *29*-ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது. பிரிவு *47(அ)*-இன் எழுத்து மற்றும் உணர்வை ஆக்கப்பூர்வமாக்குவதற்கு விதி *11(அ)* உட்பட விதிகள் வரையப்பட்டுள்ளன.

மாநில அரசுக்கு அளிக்கப்பட்ட சில சட்டப்பூர்வ அதிகாரங்களை முதன்மை சட்டத்தின் மூலம் தலைமை கட்டுப்பாட்டு வருவாய் அலுவலருக்கு அளிக்க, முதன்மைச் சட்டத்தின் பிரிவு *76(அ)*-ஆனது மாநில அரசை இயல்விக்கிறது. அத்தகைய அதிகார அளிப்பானது மாநில அரசினால் செயல்படுத்தப்படும் சட்டமியற்றும் அதிகாரத்தை ஏதும் செய்வதற்கில்லை; அதற்கிணங்கவே,

பிரிவு 47(அ)-ஆனது சேர்க்கப்பட்டது அல்லது பிரிவு 47(அ)-ஐ ஆக்கப்பூர்வமாக்க விதிகள் வகுக்கப்பட்டன. மேற்படி பிரிவு 47(அ) அல்லது விதிகளின் பின்னணியை பொருள்விளக்க மற்றும் பரிசீலிப்பதற்காக மாநில அரசுக்கு ஆதரவான ஒப்படைக்கத்தக்க குறிப்பிட்ட சில சட்டப்பூர்வ அதிகாரங்கள், முற்றிலும் தொடர்பு எதையும் கொண்டிருக்கவில்லை. பிரிவு 47(அ)-ஆனது, மாநில அரசினால் தன்னுடைய சட்டமியற்றும் அதிகாரத்தின் மூலம் சேர்க்கப்பட்டது மற்றும் அதில் வகுக்கப்பட்ட விதிகள், பிரிவு 76(அ)-வினால் ஆதிக்கம் செலுத்தப்படாமல் மாநில அரசின் சொந்த விதிகளாகக் கருதப்படவேண்டியுள்ளது.

17. எனவே, ஆய்வானது பதிவுத் துறை தலைவராலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என்பதை கவனித்து, அத்தகைய செயல்பாடானது ஒப்படைக்கப்பட்டிருக்கமுடியாது, இந்நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட கோட்பாடுகளை ஆய்வு செய்ய, உயர் நீதிமன்றம் தவறிவிட்டது. கோரப்பட்ட எந்த அறிக்கையும், மேல்முறையீட்டு அமைப்பானது தன்னுடைய செயல்பாட்டை நிறைவேற்றுவதில் உதவும் இயல்புடையதாயிருந்தது. தேவையான அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பின்னர், மேல்முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவானது, மேல்முறையீட்டு அதிகாரியினால் தாமாகவே சொந்தமாக பிறப்பிக்கப்பட்டதுபோன்று கருதப்படவேண்டும் மற்றும் அதிகாரத்தைப் பாதிக்கும் அவசிய செயல்பாடுகள் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டு அதிகாரியால் செயல்படுத்தப்படும் அதிகாரத்தைத் தழுவி யாதொரு ஒழுங்கின்மையோ அல்லது செல்லாமையையோ நாங்கள் காணவில்லை. இவ்வாறாக, மேல்முறையீட்டு அதிகாரிகள் தரப்பிலான கற்றறிந்த வழக்குரைஞரால் வைக்கப்பட்ட வாதத்தை நாங்கள் ஏற்று அதன் தரப்பில் உயர் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட முடிவை நாங்கள் நீக்கறவு செய்கின்றோம்.

18. விதி 11(அ)-இன் கீழான அதிகாரமளிப்பு தொடர்பான காரணமானது இவ்வனைத்து வழக்குகளிலும் எழுப்பப்பட்டன, அதன் அடிப்படையிலேயே, மேல்முறையீட்டு அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை உயர் நீதிமன்றம் நீக்கறவு செய்தது. இதன் தரப்பில் உயர் நீதிமன்றத்தின் முடிவுகள் தவறானவையாகும். ஒவ்வொரு வழக்குகளிலும் உயர் நீதிமன்றத்தின் மேற்படி முடிவுகளை நாங்கள் நீக்கறவு செய்து, அனைத்து வழக்குகளிலும் விதி 11(அ)-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்தி அறிக்கை கோரி, அதன் அடிப்படையில் மேல்முறையீட்டு அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட முடிவை உயிர்ப்பிக்கின்றோம்.

19. "மூன்று மாத காலம் நிர்ணயமானது விதி 7-இன் கீழ் கண்டிப்பானதாகும், அக்காலம் முடிந்தபின்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் செல்லத்தகாதவை" என இம்மேல்முறையீடுகளுள் ஆறாம் மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட முடிவு தொடர்பான வினா 2-க்கு இப்பொழுது நாங்கள் வருகின்றோம்.

19.1. பிரிவு 47(அ)-இன் துணைப்பிரிவுகள் (1) மற்றும் (2) ஆகியவை காலவரையறை தொடர்பாக எதையும் பரிந்துரைக்கவில்லை மற்றும் விதி 7-இல் உள்ள நிர்ணயமானது, நடவடிக்கைகளில் தீர்வு செய்யும் வெவ்வேறு பின்னணியில் பார்க்கப்படவேண்டுமென மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வாதிடப்படுகிறது. வாதிடப்படுவது யாதெனில்:-

> "...1968-ஆம் ஆண்டைய விதிகளின் விதிகள் 4 முதல் 7 வரையிலானவை, மாவட்ட ஆட்சியர்/அதிகாரியானவர் பல்வேறு பணிகளை நிறைவேற்ற அதாவது தரப்பினர்

தம்முடைய வழக்கை ஆதாரத்துடன் எடுத்துரைக்க 21 நாட்கள் கால அவகாசம் வழங்கி படிவம்-I-இலான அறிவிப்பு அனுப்புதல், தரப்பினர்களால் அனுப்பப்பட்ட முறையீடுகளைப் பரிசீலித்தல், ஆவணங்களை சரிப்பார்த்தல், அரசு அலுவலர் அல்லது அதிகாரியிடமிருந்து தகவல் அல்லது ஆவணத்தைக் கோருதல், முறையான அறிவிப்பிற்குப் பின்னர் சொத்தை ஆய்வுசெய்தல் மற்றும் தரப்பினர்களின் கூற்றுகளைப் பதிதல் போன்றவற்றை நிறைவேற்றப் பணிக்கின்றன. அதன்பின்னர், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு காரணிகளைக் கவனத்திற்கொண்டு, சொத்தின் தற்காலிக சந்தை மதிப்பைத் தீர்மானித்து, தரப்பினர்கள் ஆட்சேபனை ஏதுமிருப்பின் தெரிவிக்கக்கோரி, அவர்களுக்கு படிவம்-II-ஆன அறிவிப்பு அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர் பணிக்கப்படுகின்றார். அதன்பின்னர், விசாரணையின்பொழுது வைக்கப்பட்ட முறையீடுகள் மற்றும் கருத்துகளைப் பரிசீலித்து, சொத்துகளின் சந்தை மதிப்பு மற்றும் ஆவணத்தின் மீது செலுத்தத்தக்க முத்திரைக் கட்டணம் ஆகியவற்றைத் தீர்மானித்து மேற்படி உத்தரவைத் தெரிவிக்கவேண்டும். ஒட்டுமொத்த செயல்பாடும் மிகுந்த

காலத்தை எடுத்துக்கொள்ளக்கூடியதாகும். அது மூன்று மாதங்களுள் நிறைவுசெய்யப்பட முடியாததாகும்."

19.2. அதற்கெதிராக, எதிர்மேல்முறையீட்டாளர்களால் வாதிடப்படுவது:

"மாவட்ட ஆட்சியர், முறையீடுகளைப் பரிசீலித்த பின்னர், அனைத்து தொடர்புடைய காரணிகளையும் மற்றும் தன்னிடம் உள்ள ஆதாரங்களையும் கவனமாகப் பரிசீலித்த பின்னர் முதல் அறிவிப்பிலிருந்து 3 மாதங்களுக்குள்ளாக உத்தரவைப் பிறப்பிக்கவேண்டுமென, விதிகளின் விதி 7 கண்டிப்பாக்குகிறது. சந்தை மதிப்பானது உண்மையாக குறிப்பிடப்பட்டுள்ளதா? என்பது தொடர்பாக, தரப்பினர்கள், அறிவிப்பு வழங்கப்பட்ட 21 நாட்களுக்குள்ளாக தங்களுடைய முறையீட்டை சமர்ப்பிக்க, கால நிர்ணயம் செய்யும் விதிகளின் விதி 4(1)-இன் அடிப்படையிலும், விதிகளின் விதி 7-ஆனது படிக்கப்படவேண்டும். எனவே, விதிகளின் விதி 4 மற்றும் பிரிவு 47(அ)(2)-இன் அடிப்படையில் வாசிக்கப்படும் விதி 7-ஆனது விசாரணையை முடித்து குறிப்பிட்ட காலவரையறைக்குள் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கண்டிப்பாக்குகிறது. உத்தரவைப் பிறப்பிக்க கட்டாய காலவரையறையைக் கொண்டிருக்கும் நோக்கை வெளிப்படுத்தும் திருத்தத்தின் மூலம் 3 மாதங்களுக்குள்ளாக

உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் காலவரையறையானது அறிமுகப்படுத்தப்பட்டது.

... ...

முதலில் இயற்றப்பட்ட சட்டத்தின் விதி 7-ஆனது, மாவட்ட ஆட்சியர், சொத்தின் சந்தை மதிப்பை தீர்மானித்து உத்தரவைப் பிறப்பிக்க, காலவரையறை எதையும் பரிந்துரைக்கவில்லை. பதிவுத் துறை தலைவரின் (1997-ஆம் ஆண்டைய திருத்தம்) ஆலோசனை அடிப்படையில் விதி 7-ஆனது அ.ஆ. எம்.எஸ். எண் 69, நாள் 26.2.1997-இன் மூலம் திருத்தப்பட்டது."

20. சட்டப்பிரிவு 47(அ)-இன் துணைப்பிரிவு (1)-இன் கீழ், பதிவிற்கு அளிக்கப்பட்ட ஆவணத்தில் சொத்தின் உண்மையான மதிப்பு குறிப்பிடப்பட்டிருக்கவில்லையென நம்புவதற்குக் காரணம் இருக்குமெனில், மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அவர் (i) தரப்பினர்கள் விசாரிக்கப்பட போதிய வாய்ப்பளித்த பின்னர்; மற்றும் (ii) விதிகளின்படி பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் விசாரித்த பின்னர், தொடர்புடைய சொத்தின் உண்மையான மதிப்பை தீர்மானிக்க வேண்டியுள்ளது. மாவட்ட ஆட்சியரால் அனைத்து செயல்முறைகளும் நிறைவேற்றப்படுவதற்கான காலநிர்ணயம் எதையும் அந்தப் பிரிவு வரையறுக்கவில்லை. விதிகளால் பரிந்துரைக்கப்படும் "விதத்தில்", விசாரணையானது நடத்தப்படவேண்டுமென அது சாதாரணமாகக் கூறுகிறது. இவ்விதிகளில்

குறிப்பிடப்பட்டவாறு விசாரணையானது நடத்தப்படவேண்டிய முறையின் பின்னணியானது பரிசீலிக்கப்படவேண்டும்.

விதிகளின்படி, பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்:

அ) மேற்கூறப்பட்டவாறு பரிந்துரையைப்பெற்று, எவருக்கு ஆதரவாக அல்லது எவரால் ஆவணமானது நிறைவேற்றப்படுகிறதோ, அந்நபர் மேற்படி ஆவணத்தில் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பானது குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க தம்மிடமுள்ள அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிக்குமாறு தெரிவித்து, மாவட்ட ஆட்சியர் படிவம் I-இலான அறிவிப்பு அனுப்பவேண்டும். அத்தகைய நபர்கள் பதிலளிக்க, அறிவிப்பு அனுப்ப 21 நாட்கள் கால அவகாசம் வழங்கவேண்டும். [(விதி 4(1)].

ஆ) அத்தகைய அறிவிப்பு பெற்ற நபரின் கூற்றை மாவட்ட ஆட்சியர் பதியவேண்டும். [(விதி 4(2)].

இ) விசாரணை நோக்கங்களுக்காக, மாவட்ட ஆட்சியர் விதி 4(3) விவரித்துக் கூறியவாறு, முறையான அறிவிப்பிற்குப் பின்னர் யாதொரு அரசு அலுவலகத்திலிருந்தும் தகவலைக் கோரலாம் அல்லது ஆய்வுசெய்து கூற்றைப் பதியலாம் அல்லது சொத்தை ஆய்வு செய்யலாம்.

ஈ) முறையீடுகள், ஆவணம் மற்றும் சான்று ஏதுமிருப்பின், அவற்றை பரிசீலித்த பின்னர், சந்தை மதிப்பைத் தீர்மானிக்கும் தற்காலிக

உத்தரவானது அத்தகைய முடிவிற்கான காரணத்தின் அடிப்படையைத் தெரிவித்து, பிறப்பிக்கப்படவேண்டும். [விதி 4(4)]. தற்காலிக சந்தை மதிப்பை முடிவுசெய்வதற்கு, விதி 5-இல் கூறப்பட்டுள்ள கோட்பாட்டிற்கு மதிப்பளிக்கப்படவேண்டும்.

உ) தற்காலிக உத்தரவானது, ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் தொடர்புடைய அனைத்து நபர்களுக்கும் சிறிது கால அவகாசம் வழங்கி படிவம் II-இன் மூலம் தகவல் அளிக்கப்படவேண்டும்; அவர்கள் அறிவிப்பிலோ அல்லது வேறுவிதத்திலோ தீர்மானிக்கப்பட்ட நாளன்று விசாரிக்கப்படவேண்டும். [விதி 6]

ஊ) எழுத்து வடிவிலான முறையீடுகள் மற்றும் விசாரணையின்பொழுது கூறப்பட்ட பொருண்மைகள் மற்றும் சான்றுகள் ஆகியவற்றைப் பரிசீலித்த பின்னர், மாவட்ட ஆட்சியர், தொடர்புடைய சொத்தின் சந்தை மதிப்பை தீர்மானித்து, பரிவர்த்தனை ஆவணத்தின்மீது செலுத்தத்தக்க முத்திரைக் கட்டணத்தை மதிப்பிடவேண்டும். அத்தகைய உத்தரவானது "முதல் அறிவிப்பின் நாள்முதல் மூன்று மாதங்களுக்குள்ளாக" பிறப்பிக்கப்படவேண்டும்." [விதி 7]

21. "முதல் அறிவிப்பின் நாள்முதல் மூன்று மாதங்களுக்குள்ளாக" என்ற சொற்றொடர் மிகவும் முதன்மையானதாகும். விதி 4(1)-க்கு இணங்க படிவம் I-இலான அறிவிப்பை சுட்டும் "முதல் அறிவிப்பு" விரிவானதாக இருக்கவேண்டுமா? எனில், அதன் பதில் ஐயத்திற்கிடமின்றி எதிர்மறையானதாகவே இருக்கும். தொடர்புடைய

நபர்கள் பதிலளிக்க, படிவம் I-இலான அறிவிப்பானது இருபத்தொரு நாட்கள் கால அவகாசம் வழங்கவேண்டும். அவர்களுடைய பதிலைச் சார்ந்து அவர்களுடைய கூற்றுகள் பதியப்படும் அல்லது குறிப்பிட்ட சில விவரங்கள் கோரப்படலாம். அதன்பின்னர் படிவம் II-இலான அறிவிப்பானது தற்காலிக சந்தை மதிப்பைத் தீர்மானித்து வழங்கப்படவேண்டும். தொடர்புடைய நபர்கள் எழுத்து வடிவிலான ஆட்சேபனையை எழுப்ப அருகதையுடையவராவர் மற்றும் அவர்கள் கண்டிப்பாக விசாரிக்கப்படவேண்டும். இத்தேவைகளை நிறைவு செய்த பின்னர், விதி 7-க்கிணங்க உத்தரவானது பிறப்பிக்கப்படமுடியும். இவ்வனைத்து நிலைகளும் மூன்று மாதங்களுக்குள்ளாக நிறைவு செய்யப்படமுடியாது.

மேலும், விதி 7-இல் உள்ள குறிப்பானது "முதல் அறிவிப்பே" அன்றி "படிவம் I-இலான அறிவிப்பு" அல்ல. விதி 7-இன் கீழ் உத்தரவு பிறப்பிக்க வழிகோலும் சந்தர்ப்பம் மற்றும் பல்வேறு நிலைகளைப் பரிசீலித்து, "படிவம் II-இலான முதல் அறிவிப்பை"யே குறிப்பிடவேண்டியிருக்கும். படிவம் II-இல் ஒன்றிற்கு மேற்பட்ட அறிவிப்புகள் இருப்பதற்கான சாத்தியமிருக்கும், தனிச்சிறப்பாக விசாரணையானது தள்ளிவைக்கப்பட்ட தேதியில் நிகழும்பொழுது, அதனால்தான், காலமானது படிவம் II-இலான முதல் அறிவிப்பு நாள்முதல் கணக்கிடப்படவேண்டும். உடனடியாக வரும், விதி 7-இல் உள்ள "முதல் அறிவிப்பு" என்ற சொற்றொடரானது, "சொத்துகளின் சந்தைமதிப்பை தீர்மானிப்பதாகும்....." உடனடியாக வரும் விதி 6-இல் உள்ள படிவம் II-இன் அறிவிப்பை சுட்டுவதும் அதையே தெரிவிப்பதாகும்.

22. நாம் இப்பொழுது விதி 7-இல் உள்ள மூன்று மாத கால நிர்ணயமானது "கண்டிப்பானதா? அல்லது அறிவுறுத்துவதா?" என்ற வினாவைக் குறித்து விவாதிப்போம்.

23. சட்ட விதியானது எச்சூழ்நிலைகள் அல்லது சந்தர்ப்பத்தில், கண்டிப்பானதா? அல்லது அறிவுறுத்துவதானதா? என்னும் வினா தொடர்பாக கையாளும் இந்நீதிமன்றத்தின் சில முடிவுகள் பரிசீலிக்கப்பட்டு முதலில் குறிக்கப்படவேண்டும்.

அ) ***மைசூர் அரசு மற்றும் பலர் -எதிர்- வி.கே. கங்கன் மற்றும் பலர்***[21] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களின் அமர்வு கருத்து தெரிவித்ததாவது:-

> "10. ஒரு விதியானது கண்டிப்பானதா? அல்லது அறிவுறுத்துவதா? என்ற வினாவைத் தீர்மானிப்பதில், ஒருவர், வழக்கின் விவரத்தை ஆய்ந்து, புறக்கணிக்கப்பட்ட விதி மற்றும் நிலைநாட்ட எண்ணப்படும் பொது நோக்குடன் தொடர்பான விதி ஆகியவற்றைப் பரிசீலிக்கவேண்டும். ஐயமேதுமில்லை, அதன் வரம்பிற்குள் வருபவர்கள் கீழ்ப்படியுமாறு கடமைகளை விதிக்கும் அனைத்து சட்டங்களும் கண்டிப்பானவையே. ஆனால், அது, அதிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு செயல்முறையையும், நடவடிக்கைக்கு கறைப்படுத்தி கேடுண்டாக்கும் என்பதல்ல. ஒரு விதியானது கண்டிப்பானதா? அல்லது அறிவுறுத்துவதா? என்ற

---

21. (1976) 2 எஸ்.சி.சி. 895

வினாவைத் தீர்மானிப்பதில், உச்சகட்ட ஆய்வில், சட்டமியற்றியவர்களின் நோக்கத்தையே சார்ந்திருக்கும் மற்றும் அது விதியின் சொற்றொடரிலிருந்து மட்டுமின்றி அதன் தன்மை, வடிவம் மற்றும் அதன் விளைவுகள் ஆகியவற்றிலிருந்தும் தொகுக்கவேண்டியதும் மற்றும் யூகிக்கவேண்டியதுமாக உள்ளது. ... ..."

ஆ) ***டி.வி. உஸ்மான் -எதிர்- உணவுப் பொருள் ஆய்வாளர், டெலிசேரி நகராட்சி, டெலிசேரி***[22] என்ற வழக்கில் மாதிரி ஆய்வறிக்கையானது வழங்கப்படுவதற்கு, 1955-ஆம் ஆண்டைய உணவு கலப்படம் தடுப்புச் சட்டங்களின் விதி 7(3)-இன் கால நிர்ணமானது, கண்டிப்பானதா? அல்லது அறிவுறுத்துவதா? என்ற வினாவைப் பரிசீலிக்க இந்நீதிமன்றம் கோரப்பட்டது. இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு சட்ட அமர்வின் தீர்ப்புரையிலிருந்து இந்நீதிமன்றம் பின்வரும் பத்தியைக் குறிப்பிட்டது:-

"10. *தத்தாத்ரையா மோரிஸ்வர் -எதிர்- பம்பாய் மாநில அரசு*[23]

என்ற வழக்கில், கீழ்க்காணுமாறு தீர்ப்பளிக்கப்பட்டது:

"பொதுவாக பேசுகையில், பொது கடமைகளை உருவாக்கும் சட்ட விதிகள் அறிவுறுத்துவனவாகும் மற்றும் தனி உரிமைகளை வழங்குபவை கண்டிப்பானவையாகும். சட்ட விதிகள் பொது கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பானவையாக

---

22. (1994) 1 எஸ்.சி.சி. 754
23. ஏ.ஐ.ஆர். 1952 எஸ்.சி. 181

இருக்கும்பொழுது, இக்கடமையைப் புறக்கணித்து செய்யப்பட்ட செயலை இல்லாததாக்கி தீர்ப்பளிக்கும் அத்தகைய வழக்கானது, அக்கடமையில் அக்கறையுள்ள ஆனால் அதன்மீது கட்டுப்பாடற்ற நபர்களுக்கு, பொதுவான தொந்தரவையோ அல்லது அநீதியையோ கடுமையாக இழைத்துவிடும். அதேநேரத்தில், அது சட்டத்தின் முதன்மையான நோக்கை நிறைவேற்றாது மற்றும் அத்தகைய விதிகள் அறிவுறுத்துபவை மட்டுமே என தீர்ப்பளிப்பது நீதிமன்றங்களின் நடைமுறையிலிருந்து வருகின்றன; புறக்கணிப்பு செய்யப்பட்ட செயல்பாடுகளின் செல்லுங்தன்மையை பாதிப்பதில்லை."

ஆ.1) அதன்பின்னர், இந்நீதிமன்றமானது, விதி 7(3)-இல் உள்ள நிர்ணயத்தின் விளைவைப் பரிசீலித்தது:

"11. ஐயமேதுமில்லை, விதி 7(3)-இல் "ஷேல்/கண்டிப்பாக" என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது; ஆனால், அது வழக்கிற்கு முந்தைய கட்டத்தையே கையாளுகிறது என்பது மனதிற்கொள்ளப்படவேண்டும். அரசு ஆய்வாளரின் அறிக்கை பெறப்படும் நாள் மூலம், வழக்கானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகிறது மற்றும் அரசு ஆய்வாளரின் அறிக்கை அடிப்படையிலேயே, தொடர்புடைய அதிகாரியானவர், வழக்கு தொடர்வதா? அல்லது

இல்லையா? என்பது குறித்து முடிவெடுக்கவேண்டியுள்ளது. எக்காலத்திற்குள் வழக்கானது தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் காலவரையறை ஏதும் விதி 7(3)-இல் பரிந்துரைக்கப்படவில்லை; அத்தகைய கால வரையறை ஏதும் இல்லாதபொழுது, கண்டிப்பாக 45 நாட்கள் என்ற வரையறையை வைப்பதில் தகுந்த காரணமேதுமில்லை. ஒருவேளை, அரசு ஆய்வாளர், விதிகளில் பரிந்துரைக்கப்படும் காலவரையறையைப் புறக்கணிக்கலாம் என்று பொருளல்ல. அவர் அனைத்து வழக்குகளிலும் காலவரையறை கடைபிடிக்க முயற்சிக்கவேண்டும். ஆனால், ஒரு குறிப்பிட்ட வழக்கில் சற்று காலதாமதம் இருக்குமெனில், அறிக்கையானது இல்லாததாகும் எனவும் மற்றும் அதன் அடிப்படையில், வழக்குங்கூட தாக்கல் செய்யப்படமுடியாது எனவும் தீர்ப்பளிக்க காரணமேதுமில்லை. ஒரு குறிப்பிட்ட வழக்கில், அளவுகடந்த தாமதம் இருக்குமெனில், கால வரையறை பரிந்துரைக்கப்படும் காரணத்தினால், நீதிமன்றமானது அவ்வறிக்கைக்கு மதிப்பளிக்காது, சிறிது காலதாமதமும் அறிக்கையை இல்லாததாகவே அல்லது சட்டத்தில் அனுமதிக்கத் தகாததாகவே செய்துவிடும் என கூறப்படமுடியாது. இதன் வரிசையில், விதி 7(3)-ஆனது, புலனாய்வு செயல்முறை விரைவுப்படுத்தும் பொருளிலான நடைமுறை விதியாகும் என்பதும், அதன் அடிப்படையில் வழக்கானது தாக்கல் செய்யப்படவேண்டியுள்ளது என்பதும்

குறிப்பிடப்படவேண்டும். ஐயமேதுமில்லை, குற்றம் சாட்டப்பட்டவர், அரசு ஆய்வாளரின் அறிக்கையைப் பெற்ற 10 நாட்களுக்குள்ளாக ஆய்வுசெய்யப்பட்ட உணவுப்பொருள் மாதிரியை மைய ஆய்வகத்தில் பெற, நீதிமன்றத்திற்கு சட்டப்பிரிவு 13, உட்பிரிவு (2)-இன் கீழ் விண்ணப்பிக்க, அப்பிரிவானது அவருக்கு (குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு) மதிப்புவாய்ந்த உரிமையை அளிக்கிறது மற்றும் ஒருவேளை காலம் கடந்தமையாலோ அல்லது வேறு காரணத்தினாலோ மாதிரி உணவானது கெட்டு, ஆய்விற்கு அருகதையற்றதென மேற்படி ஆய்வகத்தினால் அறியப்படும் பட்சத்தில், அரசுத்தரப்பில் கற்பிக்கத்தக்க குறைபாட்டினால், அந்த மதிப்புவாய்ந்த உரிமையானது மறுக்கப்படும். இது, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிக்க அருகதையாக்குவதைப் பாதிக்கும், ஆனால், காலதாமதம் இருந்தபொழுதிலும், மாதிரியானது ஆய்விற்கு உகந்ததாக இருக்கும் வழக்குகளிலுங்கூட அத்தகைய காலதாமதம் ஒன்றே அரசுத்தரப்பு வழக்கைப் பாதிக்காது; ஏனெனில், அத்தகைய காலதாமதத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கின் நற்கூறால் பாதிக்கப்படுவதில்லை. எனவே, அத்தகைய காலதாமதமானது, பிரிவு 13(2)-இன் கீழ் வழங்கப்படும் உரிமையானது மறுக்கப்படுவதற்கு வழிகோலியுள்ளது என்பது தெரிவிக்கப்படவேண்டும் மற்றும் ஒவ்வொரு வழக்கின் பொருண்மையையும் சார்ந்ததாகும்;

விதி 7, துணை விதி (3)-இல் வழங்கப்படும் காலவரையறையின் மீறல் ஒன்றே அரசுத்தரப்பு வழக்கானது ஏற்க மறுக்கப்படுவதற்குக் காரணமாக முடியாது."

இ) ***பி.டி. ராஜன் -எதிர்- டி.பி.எம். ஷாகிர் மற்றும் பலர்***[24] என்ற வழக்கில் கோட்பாடுகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டன:-

"48. மென்மேலும், தேர்தல் பட்டியலை வெளியிடுவதற்கான காலத்தை, சட்டமே தெளிவுப்படுத்தினாலுங்கூட, அதுவே, கண்டிப்பானது எனத் தீர்ப்பளிக்கப்படமுடியாது. அத்தகைய விதியானது தன்மையில் அறிவுறுத்துவதாகும். சட்டப்பூர்வ அதிகாரியானவர், சட்டப்பூர்வ கடமையை பரிந்துரைக்கப்படும் காலத்திற்குள்ளாக நிறைவேற்றுமாறு கோரப்படுமிடத்து, அதுவே அறிவுறுத்துவதன்றி கண்டிப்பாக்குவதல்ல என்பது நன்கு தீர்வு செய்யப்பட்ட சட்டக் கோட்பாடாகும். (காண்க: *ஷிவேஸ்வர் பிரசாத் சின்உறா -எதிர்- மோங்கயர் மாவட்ட நீதித்துறை நடுவர்*[25], *நோமிதா சௌத்ரி -எதிர்- மேற்குவங்க மாநில அரசு*[26] மற்றும் *கர்பரி யூனியன் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் லிமிடெட் -எதிர்- ஸ்வப்பன் குமார் ஜனா*[27])

49. மென்மேலும், இயல்பில் சட்டத்தில் நடைமுறையாக உள்ள ஒரு விதியானது "ஷால்/கண்டிப்பாக" என்ற சொல்லை

---

24. (2003) 8 எஸ்.சி.சி. 498
25. ஏ.ஐ.ஆர். 1966 பாட்னா 144 : ஐ.எல்.ஆர். 45 பாட்னா 436 (எ.ப்.பி.)
26. (1992) 2 கல்கத்தா எல்.ஜெ. 21
27. (1997) 1 சி.எச்.என். 189

பயன்படுத்தும்பொழுதிலும், அதன்மூலம் பாதிப்பு ஏதும் ஏற்படுத்தாதபட்சத்தில், அச்சொல்லானது "கண்டிப்பாக" என முடிவு செய்யப்படக்கூடாது. (காண்க: *ராசா புலான்ட் சுகர் கம்பெனி லிமிடெட் -எதிர்- மாநகராட்சி வாரியம், ராம்பூர்*[28], *ஸ்டேட் பேங்க் ஆ.ப் பாட்டியலா -எதிர்- எஸ்.கே. சர்மா*[29], *வெங்கடசாமப்பா -எதிர்- சிறப்பு துணை ஆணையர் (வருவாய்)*[30] மற்றும் *ராய் விமல் கிருஷ்ணா -எதிர்- பீகார் மாநில அரசு*[31]*)"*

24. எனினும், ***மேக்கினான் மெக்கன்சி மற்றும் கம்பெனி லிமிடெட் -எதிர்- மேக்கினான் எம்ப்ளாயீஸ் யூனியன்***[32] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை, எதிர்மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞர் சார்ந்துநின்றார். பரிசீலனைக்கு எழுந்த சட்ட வினாக்களுள் ஒன்று, தொழிற்சாலை மூடுவதற்கான அறிவிப்பை வழங்க வகைசெய்யும், 1947-ஆம் ஆண்டைய தொழிற்சாலை தகராறு சட்டப்பிரிவு 25(எ.ப்.எ.ப்.ஏ.)-ஆனது கண்டிப்பானதா? அல்லது அறிவுறுத்துவதா? என்பதாகும்; பணியாளர் சங்கம் தரப்பில் வைக்கப்பட்ட வாதமானது கீழ்க்காணுமாறு குறிப்பிடப்பட்டது:

"37. பணியாளர் சங்கமான எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சி.யு. சிங்

---

28. ஏ.ஐ.ஆர். 1965 எஸ்.சி. 895 : (1965) 1 எஸ்.சி.ஆர். 970
29. (1996) 3 எஸ்.சி.சி. 364 : 1996 எஸ்.சி.சி. (எல்.&எஸ்.) 717
30. (1997) 9 எஸ்.சி.சி. 128
31. (2003) 6 எஸ்.சி.சி. 401
32. (2015) 4 எஸ்.சி.சி. 544

வாதிட்டதாவது, மேல்முறையீட்டாளர் நிறுவனத்தின் வழக்குரைஞரால் வாதிடப்பட்டதுபோன்று தொழிற்சாலை தகராறுச் சட்டம், பிரிவு *25(எ.ப்.எ.ப்.ஏ.)*-இல் வகுக்கப்பட்டுள்ள விதியானது "அறிவுறுத்தலேயன்றி கண்டிப்பானதல்ல" என்ற வாதமானது ஏற்கப்படுமெனில், தொழிற்சாலை தகராறுச் சட்டம், பிரிவு *30(அ)*-இன் கீழான தண்டிக்கும் விதியானது மேல்முறையீட்டாளர் நிறுவனத்திற்கு எதிராகப் பொருந்துவதால், பின்னர் *1972*-ஆம் ஆண்டில் தொழிற்சாலை தகராறுச் சட்டம், பிரிவு *25(எ.ப்.எ.ப்.ஏ.)*-இன் கீழ் திருத்தம் செய்யப்பட்டதன் நோக்கம் மற்றும் எண்ணம் ஆகியவை தகர்க்கப்பட்டு, அதற்கான நோக்கங்கள் மற்றும் காரணங்கள் ஆகியவற்றை அற்றுப்போகச் செய்வதோடு, நாடாளுமன்றத்தின் சட்ட நோக்கிற்கு முரணாகிவிடும். துறை/பிரிவை மூடுவதை முன்னிட்டு பணியாளர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுவதினின்று, பணியாளர்கள், அவர்களுடைய பணியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்படும் காரணத்தினால் அவர்களது மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் வாழ்வாதாரமானது கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதால் அவர்களை ஒப்புக்கொள்ளப்பட்ட நோக்குடன் பாதுகாக்க, தொழிற்சாலை தகராறுச் சட்டப்பிரிவு *25(எ.ப்.எ.ப்.ஏ.)*-இன் கீழ் சட்டப்பூர்வ பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. நிறுமம்/நிறுவனத்திலுள்ள

பணியாளர்களால் எதிர்கொள்ளப்படவிருக்கும் அத்தகைய மோசமான சூழ்நிலையைத் தடுக்க, ஒரு துறை/பிரிவை மூடுவதற்கு முன்பு, அதனை மூடுவதற்கான நோக்கம் அல்லது எண்ணத்தைத் தெரிவித்து, குறைந்தபட்சம் 60 நாட்களுக்கு முன்பாக மாநில அரசுக்கு அறிவிப்பு அளிக்கும் சட்டப்பூர்வ கடமையானது முதலாளியின்மீது சுமத்தப்படுகிறது."

இந்நீதிமன்றமானது மேற்கூறப்பட்ட வாதத்தை ஏற்றுக்கொண்டது. அது, ***உத்தரப் பிரதேச மாநில அரசு -எதிர்- பாபு ராம் உபாத்யாய்***[33], ***மைசூர் அரசு -எதிர்- வி.கே. கங்கன்***[21] மற்றும் ***ஷெரீப் உதின் -எதிர்- அப்துல் கனி லோன்***[34] ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளையும் மற்றும் பிற தீர்ப்புரைகளையும் சார்ந்துநின்று தொடர்புடைய விதிகள் யாவும் கண்டிப்பானவையே எனத் தீர்ப்பளித்தது. கருத்து தெரிவிக்கப்பட்டதாவது:

"44. நிறுவனத்தை மூடும் நோக்கிற்கான அறிவிப்பானது உரிய அரசிற்கு வழங்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் மற்றும் நிறுமத்தின் தொடர்புடைய துறை அல்லது பிரிவானது மூடப்பட எண்ணப்படும் நாளிற்கு குறைந்தபட்சம் 60 நாட்களுக்கு முன்பாக அறிவிப்பானது வழங்கப்படவேண்டும் என்றும் தொழிற்சாலை தகராறு சட்டப்பிரிவு 25(எ.ஃப்.எ.ஃப்.ஏ.)-இல்

---

33. ஏ.ஐ.ஆர். 1961 சி 751
34. (1980) 1 எஸ்.சி.சி. 403

உள்ள சட்டப்பூர்வ விதிகள் கண்டிப்பாக்குகின்றன. தொழிற்சாலை நீதிமன்றத்தினால் பதியப்பட்ட வழக்குரைகள் மற்றும் அறிந்தமைகளிலிருந்து காணப்படமுடிவதுபோன்று, மேல்முறையீட்டு நிறுவனத்தினால் மாநில அரசிற்கு அத்தகைய கட்டாய அறிவிப்பு வழங்கப்படவில்லை என்ற பொருண்மையின் அறிந்தமையானது உறுதியாகப் பதியப்பட்டுள்ளது. மாநில அரசிற்கு அத்தகைய அறிவிப்பை வழங்குவதன் நோக்கமானது, ஒரு நிறுமமானது தன்னுடைய துறை அல்லது பிரிவை மூடுவதா? இல்லையா? என்பதன் சாத்தியக்கூறையும் மற்றும் தொடர்புடைய பணியாளர்களை அவர்களுடைய பணியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்டு பணியற்றவர்களாக்குவதையும் பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரின் இடர்ப்பாட்டைக் குறைப்பதையும் கண்டறிவதாகும். மேலும், தொழிற்தகராறு சட்டத்தின் மேற்படி விதியானது, தொடர்புடைய பணியாளர்களின் சட்டப் பாதுகாப்பாகும், அது, மேல்முறையீட்டு நிறுவனமானது செயற்கையாகவும், காரணமின்றியும் மற்றும் நேர்மையற்ற விதத்திலும் பணியாளர்களை ஆட்குறைப்பு செய்வதினின்று தடுக்கிறது.

45. காரணங்களின் கூற்று, தொடர்புடைய பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆட்குறைப்பு அறிவிப்பு, மேல்முறையீட்டு

நிறுமத்தின் வழக்குரைகள் மற்றும் தொடர்புடைய பணியாளர்களின் ஆட்குறைப்பை நியாயப்படுத்தும் மற்றும் பிரிவு/துறையை மூடுவதற்கு ஆவணத்தில் சான்றேதுமில்லை என்பதை ஒருங்கிணைந்து வாசித்தால், அவை நேர்மையானதாகக் காண்பிக்கப்படுகிறது. எனினும் உயர் நீதிமன்றமானது தன்னுடைய மேல்முறையீட்டு வரம்பைப் பயன்படுத்தியதில், இவ்விடயத்தில் வழக்கு பொருண்மையில் உயர் நீதிமன்றத்தினால் பதியப்பட்ட ஒருமித்த முடிவானது சட்டத்தில் மோசமானதாக முடிவு செய்யப்படமுடியாது."

அவ்வாறு முடிவு செய்கையில், தொழிற்தகராறு சட்டத்தின் பிரிவு 25(எ.ப்.எ.ப்.ஏ.)-ஐ சேர்த்து திருத்தப்பட்ட 1972-ஆம் ஆண்டைய 32-ஆம் சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் காரணங்களையும் மற்றும் தேவையான அறிவிப்பை வழங்காமல் ஒரு நிறுவனத்தை மூடுவதற்கு சட்டமானது தண்டம் விதிக்கும் என்ற பொருண்மையையும் இந்நீதிமன்றம் சார்ந்துநின்றது.

25. மேற்குறிப்பிட்டவாறு, பிரிவு 47(அ)-ஆனது, தாமாகவே எந்த கால எல்லையையும் பரிந்துரைக்கவில்லை. விதி 6-இன் வாசகங்களுக்கிணங்க முதல் அறிவிப்பிலிருந்தோ அல்லது படிவம் II-ஆன அறிவிப்பிலிருந்தோ மூன்று மாத கால நிர்ணயமானது கண்டிப்பானதாக எடுத்துக்கொள்ளப்படுமெனில், அது முரண்பட்ட சூழ்நிலைக்கு வழிகோலும். படிவம் II-இல் அறிவிப்பு வழங்கப்பட்டிருந்ததென்ற பொருண்மையானது, கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படைக் கருத்தானது,

ஆவணத்தில் கூறப்பட்ட மதிப்பானது சரியான மதிப்பல்ல எனப் பொருள்படும்; அது மறுபடியும், அரசு கருவூலங்களுக்கான முறையான நிலுவைகள் மறுக்கப்படுவதாக பொருள்கொள்ளப்படமுடியும். ஏதேனும் காரணங்களுக்காக மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கைகள் முடிக்கப்படவில்லையெனில், அது பாதிக்கப்பட்டதாகவும் மற்றும் பொதுநலன் பாதிப்படைவதாகவும், உண்மையான மதிப்பை மறைப்பதற்கு அடிப்படைக் காரணமானவரே இலாபம் அடைவார் என முடிவு செய்யப்படவேண்டும். மூன்று மாத கால வரையறையை சேர்த்து விதி 7 திருத்தப்பட்டது, அரசு அலுவலர்கள் செயல்பாடுகளை மூன்று மாதங்களுக்குள் முடிந்தவரையில் முன்னதாகவே முடிப்பதற்கு முறைப்படுத்தவேயன்றி, அடிப்படையில், பொதுநலனை பாதிக்கும்வகையில் தாமாக நடந்துகொள்பவருக்கு ஆதரவாக உரிமை எதையும் ஏற்படுத்துவதற்கல்ல.

மைசூர் அரசு மற்றும் பலர் -எதிர்- வி.கே. கங்கன் மற்றும் பலர்[21] என்ற வழக்கில் வகுக்கப்பட்ட கோட்பாட்டைக்கொண்டு, விதியின் முதற்பொருளும் மற்றும் விதியின் பொது நோக்கின் மூன்று மாத தொடர்பும் பரிசீலிக்கப்படுமெனில், காலவரையறையின் நிர்ணயமானது ஒரு பணித்தலாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மற்றவிதத்தில், பொது நலனுக்கு உதவுதல் மற்றும் வருவாய் ஈட்டுதல் ஆகியவை தகர்க்கப்படும். தொடர்புடைய விதியானது, மேற்படி மூன்று மாத காலத்தை கடைபிடிக்காமையின் விளைவு எதையும் கூறியிருக்கவில்லை.

26. எனவே, விதி 7-இல் மூன்று மாத கால நிர்ணயமானது முற்றிலும் அறிவுறுத்தலே ஆகும் என நாங்கள் முடிவு செய்கின்றோம். முகப்பில் "தொடர்புடைய விதியானது கண்டிப்பானது" என்றும் உயர் நீதிமன்றத்தின் முடிவானது நீக்கறவு செய்யப்படுகிறது, இதன் அடிப்படையில் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எந்தப் பயனும் கிடைக்காது.

27. நாங்கள் தற்பொழுது வினா எண் 3-க்கு திரும்புகின்றோம். அது நிகழ்வாக சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 31633-31637/2018-இன் மூலம் எழும் ஒரேயொரு மேல்முறையீட்டில் மட்டும் எழுகிறது. இக்கட்டத்தில், மேல்முறையீட்டு அதிகாரியின் உத்தரவிலிருந்து தொடர்புடைய பகுதியானது கீழே எடுத்துத் தரப்படலாம்:-

> "2005-ஆம் ஆண்டில் பதியப்பட்ட ஆவணங்களுக்கு ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.480/- என்றும் மற்றும் 2007-ஆம் ஆண்டில் பதியப்பட்ட ஆவணங்களுக்கு ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.544/- என்றும் மாவட்ட பதிவாளர் பரிந்துரைத்துள்ளார். நிலங்கள் விம்கோ நகரில், விம்கோ நகர் இரயில் நிலையத்திற்கு எதிரில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் எண்ணூர் விரைவு சாலை ஆகியவற்றுக்கிடையே அமைந்துள்ளதென, அவர் கூறியுள்ளார். மேலும், உள்ளூர் விசாரணையின்படி, பதிவு காலத்தின்பொழுது, 2005-ஆம் ஆண்டு ஆவணங்களுக்கு ஒரு காலிமனையின் (1 கிரவுண்ட்) மதிப்பு ரூ.11.5-லிருந்து 12 இலட்சம் வரை என்றும், 2007-ஆம் ஆண்டு ஆவணங்களுக்கு ஒரு காலிமனையின் (1 கிரவுண்ட்) மதிப்பு ரூ.13-லிருந்து 14 இலட்சம் வரை என்றும் அவர் கூறியுள்ளார்.

2006 வரையில் ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.204/- என பின்பற்றி பதியப்பட்டதை கிரைய புள்ளி விவரங்களின் வாசித்தல் தெரிவிக்கிறது மற்றும் 46-அ-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டவை, இன்னும் நிலுவையில் உள்ளன. மீண்டும் 25.9.2006-க்கு பின்னர், பெருமளவிலான ஆவணங்கள் (40 ஆவணங்கள் வரையில்) ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.544/- என பின்பற்றி பதியப்பட்டுள்ளன. எனினும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பரப்பளவானது 1 முதல் 2 வரையிலான காலிமனைகள் (1 முதல் 2 வரையிலான கிரவுண்ட்ஸ்) சில வழக்குகளில் மட்டும் நிலப்பரப்பு 1200 சதுர அடியாகும்; அவையனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட மனைகளாகும். சர்வே எண் 168/7, 9, 9-இல் ஒரு சதுர அடி நிலத்தின் மதிப்பு ரூ.625/- எனப் பின்பற்றி, 2007-ஆம் ஆண்டில் ஆவண எண் 10084/2007 என்ற ஒரு ஆவணம் பதியப்பட்டுள்ளது. மேலும், ஆவண எண் 10675/07-இன் மூலம், ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.485/- எனப் பின்பற்றி, 4.957 ஏக்கர் நிலம் பதியப்பட்டு, அது பிரிவு 47(அ)-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டு, அதற்கு முத்திரைக்கான மாவட்ட வருவாய் அலுவலர், ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.920/- என நிர்ணயித்தார். அது வழக்கின் முதற்பொருளான ஆவணச் சொத்தின் பக்கத்து சொத்தும் மற்றும் ஒருபுறத்து எல்லைச் சொத்துமாகும்.

அதுபோன்ற 16290 சதுர அடி நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட மற்றொரு ஆவண எண் 10676/07-இல் ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.841/-ஆக பின்பற்றப்பட்டது; அதற்கு, முத்திரைக்கான மாவட்ட வருவாய் அலுவலர், ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.920/- என நிர்ணயித்தார். இரு மதிப்புகளும் சொத்து பதியப்பெற்றவர்களால் ஏற்கப்பட்டு அவர்கள் பற்றாக்குறை முத்திரைக் கட்டணத்தை செலுத்தினர். 1.8.2000 முதல், அச்சொத்துகளின் வழிகாட்டு மதிப்பு ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.1200/- ஆகும். 1.4.2012 முதல் வழக்குச் சொத்துகளின் தற்பொழுதைய வழிகாட்டு மதிப்பானது, ஒரு சதுர அடியின் மதிப்பானது ரூ.3500/- ஆகும்.

ஆவண எண்கள் 10675/2007 மற்றும் 10676/2007 ஆகிய கிரையப் பத்திரங்களில் பெருமளவிலான தொழிற்சாலை நிலப்பரப்புகள் சம்மந்தப்பட்டுள்ளன; அவையும், வழக்காவணங்களின் சம்பந்தப்பட்ட சொத்துகளைப் போன்றவையேயாகும். எனவே, 2005-இல் பதியப்பட்ட 5 ஆவணங்களுக்கு, சதுர அடி ஒன்றிற்கு ரூ.544/-ஐ மதிப்பாகப் பின்பற்றுமாறு முன்மொழியப்படுகிறது. 2007-ஆம் ஆண்டில் ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.920/- என பின்பற்றி பதிவதன் அடிப்படையில், வழிகாட்டு மதிப்பானது

மிதமிஞ்சியது என நம்புவதற்கு காரணம் ஏதும் தோன்றவில்லை. அதுபோன்று, 2007-ஆம் ஆண்டில் பதியப்பட்ட மூன்று ஆவணங்களுக்கு, சதுர அடி ஒன்றிற்கு ரூ.920/- என நிர்ணயிக்க முன் மொழியப்படுகிறது. 10675/2007 மற்றும் 10676/2007 ஆகிய ஆவணங்களில், நிர்ணயிக்கப்பட்ட மதிப்பானது பதியப்பெற்றவர்களால் ஏற்கப்பட்டது.

எனவே, அதற்கிணங்க அனைத்து 8 வழக்குகளிலும் மனுதாரர்களுக்கு காரணம்கோரும் அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும். எனவே, மேல்முறையீட்டாளருக்கு எதிரான தனிப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து அவருக்கும் மற்றும் 9-ஆவதாக குறிப்பிடப்பட்ட 2005-ஆம் ஆண்டில் பதியப்பட்ட 5 ஆவணங்கள் ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.544/- என 5 ஆவணங்கள் மற்றும் 2007-ஆம் ஆண்டில் ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.920/- என மூன்று ஆவணங்கள் ஆகியவை தொடர்பாக அவருடைய வழக்குரைஞருக்கும் ஒரு புதிய காரணங்கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டு, ஆட்சேபணை ஏதுமிருப்பின் 10 நாட்களுக்குள் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது; 10-ஆவதாக குறிப்பிடப்பட்டது தொடர்பாக எதன் அடிப்படையில் சொத்தின் அடிப்படை மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது என்பதையும், ஆவணக் கிரைய

விவரங்களையும் மற்றும் ஆவண எண்கள் 10675, 10676/2007-இல் நகல்களையும் அனுப்புமாறு வழக்குரைஞர் கோரப்பட்டார். இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47(அ)(5)-இன் கீழ் காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பவும் மற்றும் 11-ஆவதாக குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் விவரங்கள் அளிக்கவும் வழி ஏதும் உள்ளதா? மனுதாரரால் கோரப்பட்ட விவரங்கள், மாவட்ட வருவாய் அலுவலரின் கள ஆய்வு அறிக்கை மற்றும் ஆவண எண்கள் 10675, 10676/2007-இன் நகல்கள் ஆகியவை அனுப்பப்பட்டன."

இவ்வாறாக மாவட்ட ஆட்சியரால் தீர்மானிக்கப்பட்ட தொகையைவிட கூடுதல் தொகையை உயர்த்த முன்மொழிகையில், மேல்முறையீட்டு அதிகாரியானவர் மேல்முறையீட்டாளரான சொத்தைப் பதியப்பெற்றவருக்கு வேண்டிய அறிவிப்பை அனுப்பி, முன்மொழியப்பட்ட உயர்வுத்தொகை தொடர்பாக பதிலளிக்குமாறு கோரியிருந்தார். அதன்பின்னர்தான், 2005-ஆம் ஆண்டில் பதியப்பட்ட ஆவணங்களின் சொத்திற்கு ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.544/- என்றும் மற்றும் 2007-ஆம் ஆண்டில் பதியப்பட்ட ஆவணங்களின் சொத்திற்கு ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.920/- என்றும் உண்மை சொத்தின் சந்தை மதிப்பைத் தீர்மானிக்கும் செயல்பாடானது மேற்கொள்ளப்பட்டது.

28. அதிலிருந்து எழும் முறையீட்டில், உயர் நீதிமன்றமானது, உரிமையியல் பல்வகை மனு எண்கள் 2449-2453/2014 ஆகியவற்றில் 19.3.2018-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் கருத்து தெரிவித்ததாவது:-

> "13. முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டை முடிவுசெய்கையில், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரால் தீர்மானிக்கப்பட்ட சந்தை மதிப்பை உயர்த்தியிருந்தார் எனக் காணப்படுகிறது. இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47(அ)(5)-இன்படி தொடர்புடைய மேல்முறையீட்டாளரால் மேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சரித்தன்மையை, ஒன்றாம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆய்வுசெய்ய மட்டுமே முடியும். மேல்முறையீட்டாளரால் மேல்முறையிடப்பட்ட மேல்முறையீட்டில் சொத்தின் சந்தை மதிப்பை உயர்த்த ஆவண பதிவுத்துறை தலைவர் அதிகாரம் பெற்றிருக்கவில்லை.
>
> 14. ***ராஜேந்திரன் -எதிர்- ஆவணப் பதிவுத்துறை தலைவர் மற்றும் பலர்***[35] என்ற வழக்கில் இந்நீதிமன்றமானது தன்னுடைய தீர்ப்புரையில் தீர்ப்பளித்ததாவது, இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47(அ)(6)-இன் கீழான தன்னிச்சையான சீராய்வைப் போன்றன்றி, சொத்தின்

---

35. 2012(3) சி.டி.சி. 589

சந்தை மதிப்பை உயர்த்த மேல்முறையீட்டு அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை மற்றும் அவர், மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சரியானதன்மையை முடிவுசெய்ய மட்டுமே முடியும். எனவே, முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது, மேற்படி விதிகளில் விதி 6, 7 மற்றும் 11(அ) ஆகியவற்றை முற்றிலும் மீறுவதாகும் என்பது தெளிவாகக் காணப்படுகிறது மற்றும் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47(அ)(5)-இல் வழங்கப்படும் அதிகாரத்திற்கும் கூடுதலானது. அத்தகைய சூழ்நிலைகளில், முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவை நீக்கறவு செய்ய எனக்கு தயக்கமேதுமில்லை."

29. (மேற்படி) ***இராஜேந்திரன் -எதிர்- ஆவணப் பதிவுத் துறை தலைவர், தமிழ்நாடு மாநில அரசு மற்றும் பலர்*** என்ற வழக்கில் உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்ததாவது:-

"33. இவ்வொவ்வொரு மேல்முறையீட்டிலும் சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பை உயர்த்தும் முன்னர், பிரிவு 47, உட்பிரிவு 2-இன் கீழ் முத்திரைகளுக்கான மாவட்ட ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது வருவாய்

நலனுக்கு குந்தகமானது என்றும் நிறைவான திருப்திகரமான முடிவிற்கு சென்னை தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி/பதிவுத்துறை தலைவர் வந்ததாக தெரிவிக்கவில்லை மற்றும் மேற்கூறப்பட்ட அதிகாரியானவர் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை அல்லது அத்தகைய விசாரணை நடத்தப்பட உத்தரவிடவில்லை என்பதை இவ்வனைத்து மேல்முறையீடுகளிலும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகளை வாசித்தல் தெரிவிக்கிறது. பிரிவு 47(அ)(6)-ஐ வாசித்தல், அதிகாரத்தை தன்னிச்சையாகப் பயன்படுத்துவதை ஒன்றிணைப்பதன் பின்னணியின் அடிப்படை நோக்கானது, சட்டப்பிரிவு 47, உட்பிரிவுகள் (2) மற்றும் (3) ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது, முதலில் ஆய்வு செய்யப்பட்டு, அது வருவாய் நலனிற்கு குந்தகமானதென அறியப்படவேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது. அந்த அளவிற்கு திட்டவட்டமான அறிந்தமையிருத்தல்வேண்டும். எனவே, சட்டத்திலுள்ள விதியானது, வருவாயைப் பாதுகாக்கும் குறிப்பிட்ட நோக்குடன் நிறைவான திருப்தியுற்று, முடிவை எட்டுமாறு, அதிகாரியின்மீது கடமையை விதிக்கும்பொழுது, பிரிவு 47(அ)(2) அல்லது பிரிவு 47(அ)(3)-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் வருவாய் நலனிற்கு குந்தகமெனில், பின்னர்

தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலரான பதிவுத் துறை தலைவரின் உத்தரவானது, ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் மீது கவனம் செலுத்தி, சட்டத்தின் விதிகளின் கீழ் மேலும் நடவடிக்கைகளைத் தொடரும் முன்னர் திருப்தியுற வேண்டும்.

34. மேலும், முத்திரைக்கான மாவட்ட ஆட்சியரின் உத்தரவானது, வருவாய் நலனிற்கு குந்தகமானதென, சென்னை தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்-பதிவுத் துறை தலைவர் ஆரம்ப முடிவிற்கு வருகின்றாரென அனுமானித்தாலுங்கூட, உரிய விசாரணைக்கான வாய்ப்பானது வழங்கப்படாமல் எதிர்மறை உத்தரவேதும் பிறப்பிக்கப்படமுடியாது. முதலில் கையிலுள்ள வழக்குகளில் மேற்கூறப்பட்டதுபோன்று சென்னை தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்-பதிவுத் துறை தலைவர் அவர்களால் செய்யப்பட்டதுபோன்று அத்தகைய செயல்பாடேதும் சட்டப்பிரிவு 47(அ) உட்பிரிவு (6)-இன் கீழ் வகுக்கப்படவில்லை. எனவே, இவ்வனைத்து மேல்முறையீடுகளின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவுகள் சட்டப்பிரிவு 47(அ) உட்பிரிவு 6-இன் வரம்பிற்குள் வரவில்லையென இந்நீதிமன்றம் கருதுகிறது.

35. தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலரின் தன்னிச்சையான செயல்பாட்டு அதிகாரமானது, சட்டப்பிரிவு 474(அ) உட்பிரிவு (6) மற்றும் (7) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவாரும் மற்றும் பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடரின்படியும், தன்னிச்சையான (சுய) கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகும். உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (3)-இன் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவேதும் வருவாய் நலனிற்கு குந்தகமெனில், அவற்றைக் கோரி ஆய்வுசெய்யும் அனைத்து அதிகாரங்களையும் அவர் பெற்றிருப்பதால், அது கண்காணிப்பு அதிகாரமேயென கருதப்படமுடியும். விசாரித்த பின்னர் அல்லது விசாரிக்க செய்தபின்னர், சட்டப்பிரிவு 47(6)-இன் கீழ் உத்தரவேதும் பிறப்பிக்கும் முன்னர், இயற்கை நீதியின் கோட்பாடுகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, எந்நபருக்கெதிராக நடவடிக்கைகள் துவங்கப்படவுள்ளனவோ, அவருக்கு, தொகுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் அறிக்கையேதும் இருப்பின் அவற்றின் நகல்கள் வழங்கப்படவேண்டும். இல்லையெனில், தரப்பினர்கள் விளக்கமேதும் அளிக்கவிருப்பின் அவ்வாய்ப்பானது பறிக்கப்படும்.

36. சட்டப்பிரிவு 47(5)-இன் கீழ் நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டில், சட்டப்பிரிவு 47-இன் உட்பிரிவு 6-ஐ துணைகொள்ளாமல் சொத்தின்

சந்தை மதிப்பை உயர்த்துவது, சட்டத்தில் வகைசெய்யப்படவில்லை; அதில் சட்டமானது, விசாரணை மேற்கொள்ளவும் மற்றும் அர்த்தமுள்ள வாய்ப்பு வழங்கவும் வகைசெய்கிறது. ஐயமேதுமில்லை, சட்டப்பிரிவு *47(2)* மற்றும் *(3)*-இன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் ஐந்தாண்டுகளுக்குள்ளாக சென்னை தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்-பதிவுத் துறை தலைவர் அவர்கள் தன்னிச்சையான அதிகாரங்களைச் செயல்படுத்த சட்டப்பிரிவு *47(6)* அதிகாரங்கள் அளிக்கிறது. ஆனால், ஆவணங்களின் பரிசீலப்பானது குறிப்பாக சட்டத்தில் சேர்க்கப்பட்டதுபோன்று மேலோட்டமாக இருக்கவேண்டும் எனவும் மற்றும் சட்டப்பிரிவு *47(அ)* உட்பிரிவு *(2)* மற்றும் *(3)* ஆகியவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், வருவாய் நலனிற்கு குந்தகமானதா? என்பது குறித்து, அவர் நிறைவான முடிவிற்கு வரவேண்டுமென சட்டம் கண்டிப்பாக்குகிறது. அவர் அம்முடிவிற்கு வருவதற்கான காரணங்களைப் பதியவேண்டும்."

30. தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர், தன்னிச்சையான அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் சட்டப்பிரிவு *47(அ)* உட்பிரிவு *(2)* அல்லது உட்பிரிவு *(3)*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைக் கோரி, அதன் சரியானதன்மையை ஆய்வுசெய்யவும், உத்தரவானது வருவாய் நலனிற்கு குந்தகமானதெனில், அது குறித்து விசாரிக்கவும் அல்லது விசாரிக்கப்படச்செய்யவும் மற்றும் அவ்வுத்தரவை

எதிர்மறையாக்கவும் அல்லது அத்தகைய உத்தரவை மாற்றியமைக்கவும் அல்லது நீக்கறவு செய்து, உகந்ததெனக் கருதும் உத்தரவைப் பிறப்பிக்கவும், சட்டப்பிரிவு *47(அ)* உட்பிரிவு *(6)* தலைமை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்-பதிவுத் துறை தலைவருக்கு அதிகாரங்கள் அளிக்கிறது. மேல்முறையிடுவதற்கான காலமானது முடியும் முன்னரும் மற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் *5* ஆண்டுகள் கழிந்துவிட்டாலும், உட்பிரிவு *(2)* அல்லது *(3)*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கெதிராக நடவடிக்கை ஏதும் துவங்கமுடியாததையடுத்தும், மேற்படி அதிகாரத்தைச் செயல்படுத்துவதில் சற்று கட்டுப்பாடுகள் உள்ளன. அவ்வுத்தரவை எதிர்த்து முறையான மேல்முறையிட போதிய காலம் இருக்குமெனில், முடிவாக மேல்முறையீட்டு பரிகாரமானது மேற்கொள்ளப்படவேண்டும் என்னும் நோக்கு தெளிவாகிறது. மேலும், ஐந்தாண்டுகள் கழிந்திருக்குமெனில், தன்னிச்சையான அதிகாரத்தைச் செயல்படுத்தமுடியாது. மற்றொரு கட்டுப்பாடானது, உட்பிரிவு *(8)*-ஆல் பரிந்துரைக்கப்படுகிறது. அதன் வாசகத்தின்படி, ஒரு நபர் விசாரிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி, அவரைப் பாதிக்கும் எதிர்மறையான உத்தரவு எதையும் தன்னிச்சையாக அதிகாரத்தைச் செயல்படுத்துவதைப் பயன்படுத்தி பிறப்பிக்கப்படமுடியாது. இக்கட்டுப்பாடுகளுக்கெல்லாம் அப்பால் சட்டப்பிரிவுகள் வேறெந்த கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை மற்றும் சட்டப்பிரிவு *47(அ)* உட்பிரிவுகள் *(2)* அல்லது *(3)*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவேதும் வருவாய் நலனிற்கு குந்தகமானதல்ல என்பதை உறுதிசெய்ய கொள்கைரீதியில் அதிகாரமளிக்கப்படுகிறது.

பிரிவு *47(அ)* உட்பிரிவு *(8)*-இன் கட்டுப்பாடானது *(மேற்படி)* ***ராஜேந்திரன் -எதிர்- பதிவுத் துறை தலைவர் தமிழ்நாடு மற்றும் பலர்*** என்ற வழக்கில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் *33* முதல் *36* வரையிலான பத்திகளில்

தெளிவுபடுத்தப்பட்டன. தற்பொழுதைய வழக்கில், தொடர்புடைய நபர்களுக்குப் போதிய அறிவிப்பு அனுப்பப்பட்டது. எனவே, அவ்விடயத்தில் குறைபாடேதும் இல்லை. பிரிவு 47(அ) உட்பிரிவு (6)-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்தி நடவடிக்கைகள் துவங்கப்பட்ட நாளன்று, மேல்முறையீட்டு காலம் முடியவில்லை என்றோ அல்லது உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (3)-இன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகள் கழிந்துவிட்டன என்றோ, வழக்கேதுமில்லை. இச்சூழ்நிலைகளில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மீது சட்டம் விதிக்கும் கட்டுப்பாடுகள் ஏதும் அப்பொழுதில்லை.

31. தற்பொழுதைய வழக்கில் உயர் நீதிமன்றத்தின் கருத்துகள் தெரிவிப்பது யாதெனில், பிரிவு 47(அ)(2)-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கெதிராக சொத்தை பதியப்பெற்றவர்களால் மேல்முறையிடப்பட்ட வழக்கைக் கையாளுகையில் தன்னிச்சையான அதிகாரச் செயல்பாட்டை மேற்கொள்ளமுடியாது என்பதாகும். அக்கருத்தின் சரியானதன்மைதான் தற்பொழுது பிரச்சினையில் இருப்பது.

32. 1941-ஆம் ஆண்டைய பெங்கால் நிதி (விற்பனை வரி) சட்டத்தின் பிரிவு 20(3)-ஆல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மையைப் பரிசீலிக்கையில் ஆணையர் "விண்ணப்பத்தின் அடிப்படையிலோ அல்லது தாமாகவோ" எந்த மதிப்பீட்டையும் அல்லது உத்தரவையும் எதிர்மறையாக்க முடியும். ***தி/ள். ராம் கணை ஜாமினி ரஞ்சன் பால் பிரைவேட் லிமிடெட் -எதிர்- உறுப்பினர், வருவாய் வாரியம், மேற்கு வங்கம்***[36] என்ற வழக்கில் அனுமதியுடன் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையிலிருந்து பின்வரும் பத்தியைக் கோடிட்டது:

---

36. (1976) 3 எஸ்.சி.சி. 369

13. *ஈஸ்ட் ஏசியாடிக் கோ. (இந்தியா) லிமிடெட் -எதிர்- மெட்ராஸ் மாநில அரசு*[37] என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. இராமசாமி அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்கூட, இவ்வழக்கிற்கு தொடர்புடையவையாகும்.

> "இச்சட்டத்தின் நோக்கங்கள் இரு தன்மையினதாகும். சரக்குகளின் விற்பனைமீது வரி விதித்து, வருவாய் நட்டத்தை ஈடு செய்வதும் மற்றும் பொதுநலனை மேம்படுத்துவதுமாகும்; இரண்டாவதாக, இது மனப்போக்கில் ஏறுமாறாகச் செயல்படுத்தப்படாமல், சட்ட விதிகளின் கீழ் முறையாகச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதாகும். எனவே, ஒரு சீராய்வு அதிகாரியை ஏற்படுத்தவேண்டியுள்ளது. சீராய்வு என்றால் என்ன? சீராய்வு அதிகாரவரம்பின் சாரமானது, மேல் நீதியராயத்தின் கடமையிலோ அல்லது கீழமை நீதியராயங்கள் அல்லது அலுவலர்கள் சட்டத்தினால் பரிந்துரைக்கப்படும் எல்லைக்குள் கட்டுப்படுத்திக்கொண்டு, அவர்களின் கடமையானது அவர்களை என்ன செய்யப் பணிக்கிறதோ அதனைச் செய்வதையும் மற்றும் அவர்கள் அதனை சட்ட முறையில் செய்வதையும் கண்காணிக்கும் அத்தகைய மற்றும் வருமான வரிச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளில் காணப்படும்

---

37. (1956) 7 எஸ்.டி.சி. 299 (மெட்ராஸ்)

சீராய்வு தொடர்பான பல்லெண்ணிக்கைகளிலான சட்ட விதிகளிலிருந்து தெளிவாவதுபோன்று, அது தன்னிச்சையாகச் செய்யத்தக்கதாகும். சட்டவரம்பானது ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவலரிடமே உள்ளது. இச்சட்டவரம்பானது, உரிய வழக்குகளில் கண்காணித்தல் அல்லது சரிசெய்யும் ஒன்றாக இருக்க, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் மற்றும் வருமான வரிச் சட்டங்கள் போன்ற பல்வேறு சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளில் காணப்படும் சீராய்வு தொடர்பான பல்லெண்ணிக்கையிலான சட்ட விதிகளிலிருந்து தெளிவாவதுபோன்று தன்னிச்சையாகச் செய்யத்தக்கதாகும். தன்னிச்சையான சீராய்வு சட்டவரம்பானது, தடைசெய்யப்படவோ அல்லது கட்டுப்படுத்தப்படவோ அல்லது நிபந்தனைகள் மற்றும் தகுதிகளுக்கு உட்பட்டவையோ அல்ல. இப்பரந்த அதிகாரமானது வழங்கப்பட்டிருப்பதன் நோக்கானது, கட்டணம் செலுத்துபவரின் நலனைப்போன்றே, கருவூல நலனைக் காப்பதாகும். மாநில அரசானது மேல்முறையீட்டாளராக எந்நிலையிலும் இருக்கமுடியாது. மாநில அரசிற்கு எதிராக அதற்குப் பாதிப்பாக உத்தரவிருக்குமெனில், தனக்காதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பெற்ற கட்டணம் செலுத்துபவர் இயல்பாக மேல்முறையிடவில்லையெனில், மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட கண்காணிப்பு சட்டவரம்பைப் பயன்படுத்தி மாநில அரசின்

நலன்களைப் பாதுகாக்கவில்லையெனில், மாநில அரசானது பாதிப்படைந்துவிடும்."

33. இவ்வாறாக, கீழமை நீதியராயங்கள் அல்லது அலுவலர்கள் சட்டத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வரம்பிற்குள் கட்டுப்படுத்திக்கொண்டு, சட்டத்திற்குட்பட்டு செயல்படுவதை உறுதிசெய்யும் மேல்முறையீட்டு நீதியராயங்கள் அல்லது அலுவலரின் கடமையில் சீராய்வு சட்டவரம்பின் சாரம் இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அத்தகை அதிகாரத்தின் தன்மையானது "தன்னிச்சையாகவோ" அல்லது "தாமாக முன்வந்தோ" செயல்படுத்தப்படுவதாகும். அது, பின்வரும் தீர்ப்புகளில் விவாதிக்கப்பட்டுள்ளது:

(அ) 1951-ஆம் ஆண்டைய ஒரிசா சொத்துகள் ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 38(ஆ)-ஐ பரிசீலிக்கையில், அது சட்டப்பிரிவு 47(அ) உட்பிரிவு (7)-இல் காணப்படுவதையொட்டி எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. ***ஒரிசா மாநில அரசு மற்றும் பலர் -எதிர்- பிருந்தாபன் ஷர்மா மற்றும் ஒருவர்***[38] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்ததாவது:

"12. ..... எப்பொழுது எச்சூழ்நிலைகளின் கீழ் தன்னிச்சையான விசாரணை துவங்கப்பட்டு, உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன என்பது ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளையும் சார்ந்து, வருவாய் வாரியத்தின் தன் விருப்பத்தைச் சார்ந்ததாகும்."

---

38. (1995) சப்ளி. 3 எஸ்.சி.சி. 249

இந்நீதிமன்றத்தின் சில முடிவுகளைப் பரிசீலித்த பின்னர், தெரிவிக்கப்பட்டதாவது:-

"16. எனவே, ஒரு நோக்கை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்த சீராய்வு அதிகாரமானது வழங்கப்பட்ட பொழுது, அது அர்த்தமுள்ள முறையில் உரிய காரணமான காலத்திற்குள் செயல்படுத்தப்படவேண்டுமென, பல சட்டங்கள் உள்ளன. வரையறையின்மையானது, அதிகாரத்தை எச்சரிக்கையுடன் பயன்படுத்தவும் அல்லது சட்டத்தின் நோக்கை எல்லைக்குட்பட்டு செயல்படுத்துவது நீதியைத் தவறாகப் பயன்படுத்துவதை அல்லது சட்டத்தின் விதிகளை மீறுதல் அல்லது கீழமை அதிகாரிகளால் சட்டமானது தவறாகப் பயன்படுத்துதல் அல்லது மோசடி அல்லது உண்மையை மறைத்தல் ஆகியவற்றைத் தடுத்தல் என்பதை உறுதிசெய்வதாகும். நீடித்த காலமானது, தரப்பட்ட வழக்கின் பொருண்மையைச் சார்ந்ததாகும். அலுவலர்களுடன் கூட்டுச் சதியில் மோசடியாகப் பட்டா பெற்று, அது வெகுகாலம் கழிந்தபின்னர் அதிகாரிகளின் அறிவிற்கு வரும் ஒரு வழக்கை எடுத்துக்கொள்வோம். அது, மோசடி தரப்பினர், காலவரையறையை வாதிட்டு, உத்தரவுடன் செல்ல அவர்களின் வாய் சாமார்த்தியத்தில் உள்ளதா? மோசடியைத் தவிர்த்து, அதனைச் சரிசெய்ய சீராய்வு

அதிகாரத்தைச் செயல்படுத்துவதினின்று தடுப்பதற்கு, காலம் கடந்தமை ஒரு மன்னிப்பு வாய்ப்பாகுமா? என்றால் அதற்கு பதில்கள் "இல்லை" என்பதாகும்.

ஆ) ***விஜயாபாய் மற்றும் பலர் -எதிர்- ஸ்ரீராம் துக்காராம் மற்றும் பலர்***[39]

என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்காணுமாறு எச்சரிக்கை விடுத்தது:

"9. தாசில்தார், பிரிவு 49(ஆ)-இன் கீழ் தன்னிச்சையான அதிகாரத்தைச் செயல்படுத்தி, விருப்பம்போலன்றி, தன் முன்புள்ள ஆவணங்களின் அடிப்படையில், தன்னிச்சையாக விசாரணையைத் துவங்கவேண்டியுள்ளது. சட்டத்தின் கீழான அல்லது சட்டத்தில் தவறை சரிசெய்வதையே, தன்னிச்சையான அதிகாரத்தின் ஒவ்வொரு செயல்பாடும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவிக்கிறது. அது, எது செய்யப்பட்டிருக்கவேண்டுமோ அது செய்யப்படவில்லை அல்லது ஏதேனும் சட்டப்பூர்வ அதிகாரியின் கவனத்திலிருந்து தப்பித்தல் அல்லது தவறு அல்லது சம்பந்தப்பட்டவர்களால் நிகழ்த்தப்படும் வெளிப்படையான விடுதல் அல்லது புரிதல் போன்றவற்றை சரிசெய்ய தேவையாகிறது. நிச்சயம் அது சட்டத்தின் வரையறைக்குட்பட்டதாகும். இது கோப்பில் உள்ள சில

---

39. (1999) 1 எஸ்.சி.சி. 693

ஆவணங்களின் அடிப்படையில் இருக்கவேண்டும். அது அத்தகைய அதிகாரியின் விருப்புவெருப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுவதற்கு எல்லாவல்ல அதிகாரமல்ல. அத்தகைய அதிகாரமானது பரந்த அதிகாரமாயினும், அத்தகைய சட்டத்தின் வரையறைக்குட்பட்டு எச்சரிக்கையுடன் செயல்படுத்தப்படவேண்டியுள்ளது. அதிகாரத்தை விரிவாக்க மிகுந்த எச்சரிக்கையைக் கையாளவேண்டியுள்ளது."

34. ***ஸ்ரீ பாலாஜி ரைஸ்மில் பெல்லாரி -எதிர்- கர்நாடக மாநில அரசு***[40] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் மூவர் அமர்வினால் வழங்கப்பட்ட தீர்ப்புரையில் அடிப்படை பொருண்மைகள் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டது:-

"3. வணிக வரிகள் கூடுதல் ஆணையர், திவாஞ்சர் மண்டலம், திவாஞ்சர், "மதிப்பீட்டு அலுவலரின் 12.7.1990-ஆம் தேதியிடப்பட்ட மதிப்பீட்டு உத்தரவானது, பிழையானது மற்றும் வருவாய் நலனிற்கு குந்தகமானது" என்ற காரணத்தின் அடிப்படையில் சீராய்வு செய்ய முன்மொழிந்து, சட்டப்பிரிவு 22(அ)-இன் கீழ் 16.2.1994 மற்றும் 21.3.1994-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்புகளை அனுப்பினார். அவ்வறிவிப்புகளில் "கணக்கு புத்தகங்கள் முறையாகப் பராமரிக்கப்படவில்லை" எனக் கருத்து தெரிவித்திருந்தார்.

---

40. (2005) 4 எஸ்.சி.சி. 21

அவ்வறிவிப்புகளுக்கு மறுமொழியாக சீராய்வு அதிகாரியால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை மறுத்து, சட்டப்பிரிவு 22(அ)-இன் கீழ் துவங்கப்பட்ட நடவடிக்கைகளை கைவிடக்கோரி, 4.4.1994-ஆம் தேதியிடப்பட்ட பதிலை மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்தார். சீராய்வு அதிகாரியானவர், முந்தைய அறிவிப்புகளில் வைக்கப்பட்ட அதே முன்மொழிதலுடன், சட்டப்பிரிவு 22(அ)(1)-இன் கீழ் 8.4.1994 அன்று அடுத்த அறிவிப்பை அனுப்பினார். மேலும், சட்டப்பிரிவு 18(அ)-இன் கீழ் தண்டம் விதிப்பதாக முன்மொழிந்தார். சீராய்வு அதிகாரி 22(அ)-இன் கீழ் அனுப்பப்பட்ட அறிவிப்புகளின் முன்மொழிதல்களை 2.6.1994-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் உறுதிசெய்து, மதிப்பீட்டு அதிகாரியால் வழங்கப்பட்ட நேர் செய்தல் உத்தரவை மாற்றியமைத்தார்."

பரிசீலனைக்கெழுந்த வினாக்களுள் ஒன்று கீழ்க்காணுமாறு பத்தி 11-இல் கூறப்படுகிறது:-

"11. பின்வரும் சட்ட வினாக்கள் இந்நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட எழுகின்றன:

(அ) .....

(ஆ) .....

(இ) பிரிவு 12(அ)-இன் கீழ் ஒரு உத்தரவை சீராய்வு செய்ய எண்ணுகையில், அது 18(அ)-இன் கீழான நடவடிக்கை எதையும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிப்பிடவில்லை. இவ்வாறாக, பிரிவு 12(3)-இன் கீழ் மதிப்பீட்டு அலுவலர் உத்தரவைப் பிறப்பிக்கையில், திட்டத்தில் இல்லை. பிரிவு 12(3)-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பாக ஆணையர் பிரிவு 22(அ)-இன் கீழ் செயல்பட எண்ணுகையில், பிரிவு 22(அ)-இன் கீழான உத்தரவின் ஒரு பகுதியாகவோ பிரிவு 18(அ)-இன் கீழான தனி உத்தரவாகவோ பிரிவு 18(அ)-இன் கீழ் உத்தரவைப் பிறப்பிப்பது ஆணையரின் விருப்பத்தைச் சார்ந்ததா?

(ஈ) ....."

வினாவானது கீழ்க்காணுமாறு பரிசீலிக்கப்பட்டது:

"14. மதிப்பீட்டு அலுவலரால் கூடுதல் வரி வசூலிக்கப்படுவதை சட்டப்பிரிவு 18(அ) தடைசெய்கிறது. நபர் எவரும் பிரிவு 18(அ)-இல் குறுக்கிடுவாரெனில், சட்டப்பிரிவு 18-இன் கீழ் தண்டம் விதிக்கப்படுகிறது. வினா யாதெனில், மதிப்பீட்டின் பொழுது, மதிப்பீட்டு அதிகாரியால் தண்டம் ஏதும் விதிக்கப்படவில்லையெனில், சீராய்வு அதிகாரியானவர் சட்டப்பிரிவு 22(அ)-இன் கீழ் தன்னிச்சையான அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் "மதிப்பீட்டு உத்தரவானது வருவாய் நலன்களுக்கு குந்தகமானது" என்ற

காரணத்தின் அடிப்படையில், முதல்முறையாக தண்டம் விதிக்கமுடியுமா? என்பதாகும்.

17. கீழமை அதிகாரியால் பிறப்பிக்கப்படும் உத்தவின் மீதான சீராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் மதிப்பீட்டின் நடைமுறையிலேயே சீராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குமிடையில் வேறுபாடு உள்ளதென்பது கவனிக்கப்படவேண்டும். உத்தரவின் சீராய்வானது, உத்தரவு எதைக்கொண்டுள்ளதோ அல்லது எதை விவாதிக்கிறதோ அதற்குட்பட்டவையாகும். ஆனால், மதிப்பீட்டு நடவடிக்கைகள் சீராய்வு அதிகாரியின் முன்புள்ளபொழுது, அது, மதிப்பீட்டு அதிகாரியின் உத்தரவிற்கப்பால் சென்று, மதிப்பீட்டு அதிகாரியானவர் எவ்வுத்தரவுகளை பிறப்பித்திருக்கிறாரோ அல்லது பிறப்பித்திருக்கவேண்டுமோ அவ்வுத்தரவுகளைப் பிறப்பித்திருக்க முடியும்.

22. மதிப்பீட்டு அதிகாரியால் தண்டம் ஏதும் விதிக்கப்பட்டிருக்காதபொழுது, மதிப்பீட்டு அதிகாரிக்கும் மேலான சீராய்வு அதிகாரியோ அல்லது மேல்முறையீட்டு அதிகாரியோ முதல்முறையாக தண்டம் விதிக்கும் தகுதியுடையவரல்லர் என்னும் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதமானது முற்றிலும் நிலைக்கத்தக்கதல்ல, அது சட்ட அடிப்படையற்றதும் மற்றும் எக்கருத்திலும் காரணமற்றதுமாகும். மேற்படி வாதமானது நிராகரிக்கப்படத்தக்கதாகும். பிரிவு 22(அ)-இன் கீழ் சீராய்வு

அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான உத்தரவானது பிரிவு 18(அ)-இன் கீழ் இருக்கவேண்டிய தேவையானது மீண்டும் பிழையானதாகும். தண்டம் விதிக்காமையே சட்ட விரோதமாகும்; அது, மதிப்பீட்டு அதிகாரியால் சட்ட வரம்பைப் பயன்படுத்துவதில் நிகழ்ந்த தோல்வியால் ஏற்பட்டதாகும். எனவே, அது வருவாய் நலனுக்குக் குந்தகமானதாகும்."

35. சீராய்வு அதிகாரத்தை "தன்னிச்சையாகவோ" அல்லது "தாமாகவோ" செயற்படுத்துவதற்கு, உத்தரவானது, தனக்குக் கீழான அதிகாரியால் அல்லது அலுவலரால் பிறப்பிக்கப்பட்டுள்ளதென, தொடர்புடைய அதிகாரியானவர் திருப்தியுறவேண்டும். இங்கு மேலே கோடிடப்பட்ட முடிவுகளில், குறிப்பிடப்பட்ட சில அனுமான எடுத்துக்காட்டுகளில் தெரிவிக்கப்பட்டதுபோன்று, பிழையானது தெரியாமல் நிகழ்ந்திருக்கவேண்டும் அல்லது நியாயமான தவறிருக்கலாம் அல்லது சில வழக்குகளில் வருவாய் நலனிற்குக் குந்தகம் செய்ய வெளிப்படையான முயற்சி இருக்கலாம். குறைபாடு அல்லது சட்ட விரோதமானது சீராய்வு அதிகாரியின் கவனத்திற்கோ அல்லது அறிவிற்கோ கீழமை அதிகாரி அல்லது அலுவலர் மூலம் வழக்கமான அல்லது முறையான அறிக்கையாக கொண்டுவரப்படுமெனில், சீராய்வு அதிகாரமானது நிச்சயமாகச் செயல்படுத்தப்படமுடியும். சீராய்வு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தைச் செயல்படுத்தவைக்கும் தேவையான அறிவானது, சொத்து பதியப்பெற்றவரால் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டிலிருந்தே தொகுக்கப்படமுடியும். அதுவொன்றே, செயல்முறையில் குறைபாடு அல்லது சட்ட விரோதத்திற்கான சாத்தியம் குறித்த தகவலைச் சேகரிக்க அதிகாரியை இயல்விக்கவைக்கும் சந்தர்ப்பமாகவோ அல்லது

விவரமாகவோ இருக்கலாம். சீராய்வு அதிகாரியானவர் அவ்வாறு அறிந்து பின்னர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தைச் செயல்படுத்துவார். சட்டத்தினால் விதிக்கப்படும் வரையறை அல்லது கட்டுப்பாட்டிற்குட்பட்டு அதிகாரமானது செயல்படுத்தப்படும்வரையில் மற்றும் சட்டத்திற்குட்பட்டிருக்கும் வரையில், தர அளவில் தகவல் அல்லது அறிவிற்கான மூலம் யாதென்பது தொடர்பாக எதையும் வேறுபடுத்துவதில்லை. சட்டத்தினால் விதிக்கப்படும் கட்டுப்பாட்டிற்கும் அப்பால், தகவலின் மூலம் அல்லது தன்மை தொடர்பான காரணத்தின் அடிப்படையில், அதிகாரச் செயல்பாட்டில் ஏதும் கற்பிக்கப்படமுடியாது.

மேல்முறையீட்டை ஏற்கையில், வெளிப்படையான சட்டவிரோதமானது சீராய்வு அதிகாரியால் கவனிக்கப்படுமெனில், கீழமை அலுவலர் அல்லது அதிகாரியால் புரியப்பட்ட தவறை அகற்றவோ அல்லது சரிசெய்யவோ, சீராய்வு அதிகாரியானவர், அதிகாரச் செயல்பாட்டின் மீது சட்டத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டிற்குட்பட்டு, உடனடியாக தன்னிச்சையான அதிகாரத்தைச் செயல்படுத்தமுடியும்.

36. சட்டப்பிரிவு 47(அ)-வின் கீழ் தன்னிச்சையான அதிகாரத்தைச் செயல்படுத்துவதைக் கட்டுப்படுத்த சட்டத்தின் திட்டத்தில் ஏதும் எண்ணப்படவில்லை. கீழமை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் குறைபாடு அல்லது சட்ட விரோதம் உள்ள வழக்குகளில் அதுகுறித்து அறிவானது, நிலுவையிலுள்ள மேல்முறையீட்டைத் தவிர வேறு விவரத்திலிருந்து சேகரிக்கப்படவும் நிர்ப்பந்திக்கவில்லை. அதிகாரச் செயல்பாட்டை சட்டமானது வெளிப்படையாகவோ அல்லது தேவையான சேர்க்கையின் மூலமாகவோ கட்டுப்படுத்தினாலன்றி, அதிகாரத்தில் வேறெந்த கட்டுப்பாடுகளையும் கற்பிக்கும் சூழலிருக்காது. அதிகாரச் செயல்பாடானது செல்லாதென, எவ்விதத்திலும் உயர் நீதிமன்றம்

அறிந்திருக்கவுமில்லை, அத்தகைய வாதமேதும் உயர் நீதிமன்றத்தின் முன்பு வைக்கப்படவுமில்லை. உயர் நீதிமன்றமானது, அதிகாரச் செயல்பாட்டை ஆய்வதை விடுத்து, சாதாரணமாக இருக்கும் அதிகாரம் குறித்தே ஆய்ந்துள்ளது. அது மேல்முறையீட்டு அதிகாரியால் செய்யப்பட்ட மதிப்பீடானது இயற்கை நீதி கோட்பாட்டிற்கு முரணானது அல்லது வெளிப்படையாக அறியக்கூடியவகையில் தவறானது மற்றும் எந்நிலையிலும் நிலைக்கத்தக்கதல்ல என்பதுபோன்றதல்ல. எங்களுடைய கருத்தில் தொடர்புடைய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட அதிகாரச் செயல்பாட்டை நீக்கறவு செய்ததன்மூலம் உயர் நீதிமன்றமானது முற்றிலும் தவறிழைத்துவிட்டது. வெளிப்படையான சட்ட விரோதம் மற்றும் வருவாய் நலனிற்கு குந்தகம் ஆகியவற்றைத் தெளிவுபடுத்தும்வகையில், அதிகாரச் செயல்பாடானது திட்டமிடப்பட்டது. செயல்பாடானது முற்றிலும் சரியானது மற்றும் அதனைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நீக்கறவு செய்வதற்கான சூழலேதுமில்லை. எனவே, வினா எண் 3-க்கு அதற்கிணங்க நாங்கள் பதிலளிக்கின்றோம்.

37. இவ்வாறாக, எங்கள் பரிசீலனைக்கெழுந்த அனைத்து வினாக்களையும் பரிசீலித்து பதிலளித்துள்ளோம். அனைத்து மேல்முறையீடுகளும் அனுமதிக்கத்தக்கவையாகின்றன. அதற்கிணங்க நாங்கள் உத்தரவிடுகின்றோம் மற்றும் மேல்முறையீட்டிலுள்ள உயர் நீதிமன்றத்தின் முடிவுகளை நீக்கறவு செய்து, மேல்முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை உயிர்ப்பிக்கின்றோம். செலவுத்தொகைகள் ஏதுமில்லை.

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்
மாண்புமிகு நீதியரசர் திரு. இந்து மல்ஹோத்ரா

புது தில்லி,
15.06.2020.

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."